வருடாந்த செயல்நிறைவேற்று மற்றும் கணக்கு அறிக்கை

2024

தலைப்பு - 269

மாவட்ட செயலகம்,
மட்டக்களப்பு

உள்ளடக்கம்			
விபரம்			பக்க இலக்கம்
01	**நிறுவனத்தின் விபரம், நிறைவேற்றுப் பொழிப்பு**		
	1.1	அறிமுகம்	01-02
	1.2	நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்	03
	1.3	மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பாடுகள்	04
	1.4	நிறுவன ஆளணி அமைப்பு விளக்கப்படம்	05
	1.5	அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், திணைக்களத்தின் பிரதான பிரிவுகள், மாவட்ட செயலகத்தின் பிரதேச செயலகங்கள்	06
	1.6	அமைச்சு, திணைக்களங்கள், மாகாண சபையின் கீழுள்ள நிறுவனங்கள், நிதியங்கள்	07
	1.7	வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம் (இருப்பின்)	
02	**முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்**		
	2.1	சிறப்பு அடைவுகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்	08-12
03	**31.12.2024ல் முடிவடைந்த வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச்செயலாற்றுகை**		
	3.1	நிதிச் செயலாற்றுகைக் கூற்று	13
	3.2	நிதி நிலமைக் கூற்று	14
	3.3	காசுப் பாய்ச்சல் கூற்று	15
	3.4	நிதிக்கூற்றுக் குறிப்புகள்	16-37
	3.5	வருமான சேகரிப்பு செயலாற்றுகை	38
	3.6	ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை	39
	3.7	நி.பி.குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுகள், திணைக்களங்களின் முகவர்,மாவட்டச் செயலகம், மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு	40-47
	3.8	நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை	48
	3.9	கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை	49-73
04	**செயலாற்றுகைச் சுட்டிகள்**		
	4.1	நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)	74
05	**பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை**		
	5.1	அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை சுட்டிக் காட்டல்.	75-79
	5.2	பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள்	79

உள்ளடக்கம்			
விபரம்			பக்க இலக்கம்
06	மனிதவள விபரம்		
	6.1	பதவியணி முகாமைத்துவம்	80
	6.2	நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு தாக்கம் செலுத்திய மனித வளங்களின் மிகை அல்லது குறை எவ்வாறானது என்பதனை சுருக்கமாகக் குறிப்பிடுதல்	
	6.3	மனித வள அபிவிருத்தி	81-83
07	இணக்கப்பாட்டு அறிக்கை		84-89

அத்தியாயம் 01 நிறுவனத்தின் சுருக்கவிபரம் / நடைமுறைப்படுத்தல் சுருக்கம்

1.1 அறிமுகம்

அரசாங்க அதிபரின் செய்தி

2024 ஆம் ஆண்டிற்கான மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையினை, சமர்ப்பிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இவ் அறிக்கையானது மட்டக்களப்பு மாவட்டத்தில் எட்டப்பட்ட முக்கிய முயற்சிகள், செயற்திட்டங்கள் மற்றும் பெறுபேறுகள் பற்றிய விரிவான கண்ணோட்டத்தை வழங்குகின்றது.

2024 ஆம் ஆண்டின் முற்பகுதியில் பொருளாதார கொள்கைரீதியாக பொருளாதார ஸ்திரதன்மை, நிதி ஒழுக்கம் மற்றும் நிலையான வளர்ச்சி என்பவற்றில் கவனம் செலுத்தியதுடன் கடன் மறுசீரமைப்பு, உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பசுமைப்பொருளாதாரத்தை வளர்ப்பதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.இந்தக் கொள்கைகள் அபிவிருத்தி முன்னேற்றத்திற்கு வலுவான ஒரு அடித்தளத்தை அமைத்தது. மேலும் கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட சவால்களை எதிர்கொள்ளும் அதேவேளையில், பொதுச்சேவைகளை விருத்தி செய்து உட்கட்டமைப்பை வலுப்படுத்துவதுடன், சுற்றுச்சூழலின் நிலைபேற்றுத் தன்மையினை மேம்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

செப்டம்பர் 2024 இல் புதிய அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு தேசிய கொள்கைகள் மக்களை மையமாகக் கொண்ட வளர்ச்சி மற்றும் சமூக நீதியை நோக்கி நகர்ந்தன. அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் உள்ளூர் பொருளாதாரங்களின் அதிகாரமளித்தல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தது. புதிய கொள்கைகள் பரவலாக்கப்பட்ட நிர்வாகத்தை வலுப்படுத்தல், சமூகம் சார்ந்த வளர்சியை ஊக்குவித்தல் மற்றும் வளர்ச்சியின் பலன்கள் சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளுக்கும், குறிப்பாக கீழ்மட்ட மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் சமமாகப் பகிரப்படுவதை உறுதி செய்வதில் கவனம் செலுத்துகிறது. இந்த புதுப்பிக்கப்பட்ட கவனத்துடன், மட்டக்களப்பு மக்களுக்கான நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்குவதற்கு சமூக நலத்திட்டங்களை மேம்படுத்துதல், நிலையான விவசாயத்தை ஊக்குவித்தல் மற்றும் உள்ளூர் கைத்தொழில்களை ஆதரித்தல் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளித்துள்ளோம்.

முழு ஆண்டினையும் பார்க்கும் போது , மட்டக்களப்பு மாவட்டம் கல்வி, சுகாதாரம், சுற்றாடல் பேண்தகைமை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்துள்ளது. நமது குடிமக்களின் வாழ்கைத்தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட முக்கிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக பசுமை மேம்பாடு மற்றும் காலநிலை – எதிர்ப்பு உட்கட்டமைப்பை ஊக்கவிக்கும் திட்டங்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, சுற்றுச்சூழலுக்கு உகந்த விவசாயம் மற்றும் சமூக நலன் ஆகியவற்றில் எங்களின் தொடர்ச்சியான கவனம் மாவட்டத்திலுள்ள அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சியிலிருந்து பயனடைவதை உறுதிசெய்வதில் மையமாக உள்ளது.

மாவட்டத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்துச் செல்வதற்கு தொடர்ந்து ஆதரவளிக்கும் அரசாங்கத்தின் அரசியல் தலைமைகளுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன். எமது மாவட்டத்தின் முன்னேற்றத்திற்காக சமூக பொருளாதார அபிவிருத்தி வேலைத்திடங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதில் அயராது முயற்சிக்கும் மாவட்ட செயலக அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி திணைக்கள தலைவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

நாம் முன்னோக்கிச் செல்லும்போது, அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள புதிய தொலைநோக்குப் பார்வைக்கு நாம் அர்ப்பணிப்புடன் இருப்பதோடு, மட்டக்களப்பு ஒரு துடிப்பான மற்றும் வளமான மாவட்டமாகத் திகழ்வதை உறுதி செய்வதற்கும், நாட்டின் அபிவிருத்தி இலக்குகளுக்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்குவதற்கும் தொடர்ந்து ஒன்றிணைந்து செயற்படுவோம்.

திருமதி. ஜே.ஜே.முரளீதரன்,
மாவட்ட செயலாளரும் / அரசாங்க அதிபரும்,
மாவட்ட செயலகம்,
மட்டக்களப்பு.

மாவட்டத்தின் வரலாற்று முக்கியத்துவம்

மாவட்டத்தின் பெயர் மட்டக்களப்பு நகரத்தின் பெயரைக்கொண்டு மட்டக்களப்பு மாவட்டம் என அழைக்கப்படுகின்றது. மட்டக்களப்பு நகரமானது ஆரம்பத்தில் புளியந்தீவு எனும் பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளது. மட்டக்களப்பு என்பது மட்டி களப்பு (Muddy land), அதாவது சேற்று நிலமுடைய (wet land) களப்புப் பாங்கான பிரதேசம் எனப் பொருள்படும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் விஸ்தீரணமானது 2854 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டுள்ளதுடன், கிழக்கு கடற்கரையிலிருந்து 130 கிலோ மீற்றரிலும், தெற்கில் துறைநீலாவணை தொடக்கம், வடக்கில் வெருகல் ஆறு வரை பரந்து காணப்படுகின்றது.

வைத்தியர் சீ.ஏ. கிரிகன் பக் சார்ஜன்ட் அவர்கள் மட்டக்களப்பு தொடர்பாக கூறும்போது, மட்டக்களப்பிலுள்ள புளியந்தீவானது, கடலிலிருந்து 4 கி.மீ. தூரத்தில் கடலோடு இணையும் மத்திய பகுதியில் அமைந்துள்ளதாகவும், பிரதான நிலப்பரப்பிலிருந்து தெற்கு மற்றும் மேற்கு நீர்ப்பரப்பால் பிரிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். இம்மாவட்டத்தின் பெரும்பாலான நிலப்பரப்பு சதுப்பு நிலமாகக் காணப்படுவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இது மிகவும் உயரமாகவும், 10 மைல்கள் வரை வயற்காணிகளினால் சூழப்பட்டுள்ளதாகவும் காணப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக அவ்வேளையில் பிரபல்யமல்லாத சிறிய தீவுகளில் ஒன்றான “போன்” தீவில் அப்போதைய உதவி அரசாங்க அதிபராக இருந்த திரு. போன் அவர்களுக்கு பங்களா ஒன்று நிர்மாணிக்கப்பட்டது.

ஒல்லாந்தர் கோட்டைக்கு முன்பாக உள்ள வாவியின் ஆழப்பகுதியிலிருந்து பல்வேறு இனிமையான இசை ஒலி காற்றில்லாத வேளைகளிலும் பௌர்ணமி நாட்களிலும் கேட்பதாக நம்பப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்டம், இயற்கையாகத் தேன் கிடைக்கக்கூடிய வனப்பிரதேசங்களைக் கொண்டுள்ளதாலும், வாவியில் மீன் பாடுவதனாலும் “மீன்பாடும் தேனாடு” என்று அழைக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு நகரம் 1622 ஆம் ஆண்டு, போர்த்துக்கேயர்களால் கைப்பற்றப்பட்டதுடன், 1639 ஆம் ஆண்டில் ஒல்லாந்தராலும், 1796 ஆம் ஆண்டில் ஆங்கிலேயராலும் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது.

மட்டக்களப்பில், 1870 ஆம் ஆண்டு பிரதான அரசாங்க அதிபர் அலுவலகம் நிறுவப்பட்டது. இதற்கு முன்னர், அரசாங்க அதிபர் அலுவலகம், திருகோணமலையில் உப அலுவலகமாகக் காணப்பட்டது. மட்டக்களப்பின் முதல் அரசாங்க அதிபராக திரு. ஆர்.டபிள்யூ.ரி. மொரிஸ் அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்.

மாவட்டத்தின் இயற்கை வளங்கள்

- மட்டக்களப்பு மாவட்டம் கரையோர மாவட்டமாகக் காணப்படுகின்றமையால், கடல் வளம் பிரதான வளமாக காணப்படுகின்றது. மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகங்களில், 08 பிரதேச செயலகங்களின் 76 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் ஏறக்குறைய 130 கிலோ மீற்றர் நீளமான பகுதிகள் கரையோரத்திலேயே காணப்படுகின்றது. மட்டக்களப்பு வாழ் மக்களின் முக்கிய ஜீவனோபாயங்களில் ஒன்றாக உவர் நீர் மீன்பிடித்தொழில் காணப்படுகின்றது.
- மாவட்டத்தின் பெயருக்குரியவாறு, துறைநீலாவணை தொடக்கம் வாழைச்சேனை வரை உள்ளக நீரினை கொண்ட 229.19 சதுர கிலோமீற்றர் பரப்புடைய மிக நீண்ட களப்பு காணப்படுவதுடன், இது மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பின் 8.70% வீதமாகும். களப்பினை அண்டிய கிராமப் பகுதிகளில் வாழும் மக்களில் நன்னீர் மீன்பிடித்தொழிலில் ஈடுபடுவோர் அதிகமாக காணப்படுகின்ற போதிலும் துறைநீலாவணை, களுதாவளை மற்றும் குருக்கள்மடம் ஆகிய கிராமங்களில் களப்புப் பகுதி வேளாண்மை பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதனையும் காணக்கூடியதாகவுள்ளது.
- புராதன காலத்தில் இது ஒரு துறைமுகப்பட்டணமாக காணப்பட்டுள்ளதுடன், இதன் போது பயன்படுத்தப்பட்ட பாரந்தூக்கும் இயந்திரங்கள் தற்போதும் சுங்க வீதியில் காந்திப்பூங்கா வாவியோரமாக காணப்படுவதனை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது..
- பாசிக்குடா கடற்கரை அலையற்ற பிரபல்யம் வாய்ந்த கடற்பகுதியாக காணப்படுவதுடன், இது இலங்கையில் காணப்படும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை கவர்ந்த முக்கிய சுற்றுலாத்தலமாகவும் காணப்படுகின்றது.
- மட்டக்களப்பு மாவட்டத்தின், பிரதான வருமானம் ஈட்டும் துறையான நெற் பயிற்செய்கைக்கு உகந்த வண்டல் மண் தொகுதி, மாவட்டத்தின் மேற்கு பகுதியில் காணப்படுகின்றது. இது மாவட்டத்தின் உணவு தன்னிறைவுக்கும், அரிசி உற்பத்தி செய்யும் பிரதான மாவட்டங்களில் ஒன்றாகத் திகழ்வதற்கும் ஏதுவாக அமைந்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் மக்களது பிரதான தொழிலாக விவசாயம் மற்றும் மீன்பிடி காணப்படுகின்றது.

1.2 மாவட்ட செயலகத்தின் தூர நோக்கு, குறிக்கோள், நோக்கம்.

தூர நோக்கு

"இலங்கையில் ஒரு முன்னணி பொதுச்சேவை நிறுவனமாக திகழ்தல்"

குறிக்கோள்

"மட்டக்களப்பு மாவட்ட மக்களின் உன்னத வாழ்விற்காக, அனைத்து துறைகளினதும் ஒருங்கிணைவு மற்றும் மக்கள் பங்களிப்புடன், அரச கொள்கைகளை நிலைபேறான அபிவிருத்திச் செயன்முறையினூடாக அமுல்படுத்துவதன் மூலம், வினைத்திறனான பொதுச் சேவையினை வழங்குதல்"

நோக்கம்

- அரசாங்க கொள்கைகளை, திறம்பட அமுல்படுத்துவதை உறுதிப்படுத்தல்.
- பொதுச்சேவையை, வெளிப்படையானதும் பக்கச்சார்பற்றதும் பொறுப்புணர்வுடையதுமாக ஸ்தாபித்தல்
- சமூக, பொருளாதார, கலாசார விழுமியங்களை மேம்படுத்தலும், பாதுகாத்தலும்.
- நிதி முகாமைத்துவம் மற்றும் நிர்வாக முறைமைகளை வழங்கலின் ஊடாக சேவையின் தரத்தினை மேம்படுத்தல்
- நியாயமானதும் பக்கச்சார்பற்றதுமான அணுகுமுறைகளில் கவனம் செலுத்தி மக்களின் வாழ்க்கை முறையினை மேம்படுத்துவதற்கான பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகளை மேம்படுத்தல்.
- நவீன தகவல் தொழில்நுட்பம் மற்றும் புத்துருவாக்கத்தின் ஊடாக சேவையின் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்.
- இயற்கை வளங்களை நிர்வகித்தல் மற்றும் நிலைபேறான விவசாய நடவடிக்கைகளை உருவாக்குதல்
- இடர் மற்றும் பேரிடர்களை முகாமை செய்வதற்கான முன் திட்டமிடல் நடவடிக்கைகளை உறுதிப்படுத்தல்.
- தேர்தல் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்
- திருமணம் மற்றும் பிறப்பு, இறப்பு போன்றவற்றையும் அசையும், அசையா சொத்துக்களையும் பதிவு செய்வதன் ஊடாக பொது மக்கள் தங்கள் உரிமைகளை பாதுகாக்க உதவுதல்.

1.3 மாவட்ட செயலகத்தின் முக்கிய செயற்பாடுகள்

1. மாவட்ட மட்டத்தில் தேசிய நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்தலும் நடாத்துதலும்
2. மாவட்ட நிருவாகத்தின் ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பும் முகாமையும்
3. மாவட்டத்தில் அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தலும் கண்காணித்தலும்
4. தேர்தல் தொடர்பான அனைத்து கடமைகளையும் மேற்கொள்ளுதல்
5. துப்பாக்கி மற்றும் வெடி பொருட்கள் தொடர்பான அனுமதிப்பத்திர நடவடிக்கைகள்.
6. குறுகிய கால நடுத்தர கால அபிவிருத்தி திட்டத்தினை தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்
7. சமுர்த்தி போன்ற வறுமை ஒழிப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
8. விளையாட்டு, கலாசார நடவடிக்கைகளை மேம்படுத்தல்
9. மாவட்டத்தில் நுகர்வோர் உரிமைகமைகளை சந்தை புலனாய்வு மற்றும் நுகர்வோர் பலப்படுத்தல் ஊடாக பாதுகாத்தல்
10. மாவட்டத்தில் முதலீட்டு வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு வசதி செய்தல்.
11. மாவட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தலும் ஒருங்கிணைத்தலும்.
12. திருமணம் மற்றும் பிறப்பு, இறப்பு போன்றவற்றையும் அசையும், அசையா சொத்துக்களையும் பதிவு செய்வதன் ஊடாக பொது மக்கள் தங்கள் உரிமைகளை பாதுகாக்க உதவுதல்.

1.4 நிறுவன அமைப்பு வரைபடம்



நு.அ.: நகர்வேர் அதிகார சபை
பி.தி.: பிரதி திட்டமிடல் பணிப்பாளர்
அ.உ.: அபிவிருத்தி உத்தியோகத்தர்

அ.மு.உ. : அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பார்
உ.தி : உதவி திட்டமிடல் பணிப்பாளர்

வெ.பொ.உ. : வெடி பொருள் உதவி பணிப்பளர்
ப.நி.உ. : பதவி நிலை உதவியாளர்

1.5 அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், திணைக்களத்தின் பிரதான பிரிவுகள், மாவட்ட செயலகத்தின் பிரதேச செயலகங்கள்

இல	பிரதேச செயலகங்கள்	கிராம உத்தியோகத்தர் பிரிவுகள்	கிராமங்கள்
1	காத்தான்குடி	18	25
2	ஏறாவூர்பற்று	39	204
3	ஏறாவூர் நகரம்	15	60
4	மண்முனை தென் எருவில் பற்று	45	59
5	மண்முனை வடக்கு	48	121
6	கோறளைப்பற்று மேற்கு	08	30
7	கோறளைப்பற்று	12	31
8	மண்முனை மேற்கு	24	114
9	கோறளைப்பற்று வடக்கு	16	47
10	மண்முனைப்பற்று	27	51
11	மண்முனை தென்மேற்கு	24	90
12	போரதீவு பற்று	43	112
13	கோறளைப்பற்று தெற்கு	18	76
14	கோறளைப்பற்று மத்தி	08	16
	மொத்தம்	**345**	**1,036**

மாவட்ட நிருவாக வரைபடம்



1.6 மாவட்ட செயலகத்திற்கான நிதி மூலங்கள்

மாவட்ட செயலகத்திற்கான நிதியானது அரச வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக உருவாக்கப்படும் ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

1.7 மாவட்ட செயலகத்திற்கான வெளிநாட்டு நிதி மூலத்தின் விபரங்கள்

2024 ஆம் ஆண்டில் வெளிநாட்டு நிதி மூலத்தின் கீழ் எமது மாவட்ட செயலக மனைசார் பாட-சாலைப் போஷாக்கு வேலைத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக உலக உணவு உதவிக்கான கூட்டுச் செயலகம் ஊடாக உலக உணவு வேலைத்திட்டத்திலிருந்து 39,777,036.78 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இக்கருத்திட்டத்தின் கீழ் மண்முனை தென் மேற்கு, மண்முனை மேற்கு, மற்றும் ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவுகளின் பகுதியொன்றை உள்ளடக்கும் வகையில், மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் விவசாயம் வீட்டுத்தோட்டங்கள் மற்றும் கோழிப்பண்ணைகளை விரிவுபடுத்துவதன் ஊடாக பாடசாலை உணவு வேலைத்திட்டம் வலுப்படுத்தப்பட்டது.

அத்தியாயம் 02 முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

2.1 சிறப்பு அடைவுகள்

1. வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட77,033 பயனாளிகளுக்கு அஸ்வசும கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.
2. 70 வயதிற்கு மேற்பட்ட 15,302 முதியோர்களுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக முதியோர் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.
3. அடையாள அட்டையில்லாத 657 அஸ்வசும பயனாளிகளுக்கு புதிய அடையாள அட்டை வழங்கும் செயற்பாடு துரிதப்படுத்தப்பட்டு கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.
4. பிரதேச செயலாளர் பிரிவுகளில் வெற்றிடமாக இருந்த கிராம சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப உதவியாளர்கள் பதவிகளுக்கு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டமை.
5. அரச உத்தியோகத்தர்ளுக்கு இவ்வருடம் 21 பயிற்சி நெறிகள் நடாத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் உத்தியோகத்தர்களின் ஆளுமை விருத்தி, நேர்மறையான எண்ணம் தொடர்பாக மனநிலையில் மாற்றம் மற்றும் அலுவலக கடமை தொடர்பான மேலதிக அறிவினை விருத்தி செய்யக்கூடியதாகவிருந்தது.
6. சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்களால் கையாளப்படும் சம்பவங்களை ஆவணப்படுத்த தரவுத்தளம் ஒன்று உருவாக்கப்பட்டமை.
7. மாவட்ட செயலக SMART SRI LANKA நிலையத்தின் ஊடாக உயர்தர பரீட்சையில் தோற்றிய தொழில் துறைக் கல்வியை எதிர்பார்க்கும் மாணவர்களுக்கு NVQ மட்டத்திற்கு இணையான கணனி பயிற்சி வழங்கப்பட்டது.
8. இவ் வருடம் 258 முன்பள்ளியைச் சேர்ந்த 7761 மாணவர்களுக்கு போசாக்கினை மேம்படுத்தும் முகமாக ரூபா 69,436,160.00 நிதி செலவிடப்பட்டது.
9. இவ் வருடம் கர்ப்பிணித்தாய்மார்களுக்கு ஆரோக்கியமான எதிர்கால சந்ததியினரை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 347,796,000.00 நிதிச் செலவில் போசாக்கு பொதிகள் வழங்கப்பட்டது.
10. மாவட்டத்தின் கலைஞர்களுக்கு பாடசாலை மற்றும் திறந்த போட்டி மட்டங்களில் தேசிய இலக்கிய விருது 13 உம் அரச நாடக விருது 05 உம் அரச நாட்டிய விருது 05 உம் கிடைக்கப்பெற்றமை.
11. மாவட்டத்தில் காணி, நிதி மற்றும் குடும்பம் தொடர்பான 4000 பிணக்குகளுக்கு தீர்வு காணப்பட்டது. இதன் மூலம் மக்களின் பணம் சேமிக்கப்பட்டுள்ளது.
12. இவ்வாண்டில் நடைபெற்ற 48வது தேசிய மட்ட விளையாட்டு விழாவில் மட்டக்களப்பு மாவட்டம் தங்கம்-03 ,வெள்ளி-01 ,வெண்கலம்-04 பதக்கங்களை வெற்றி கொண்டது.
13. மாகாண மட்ட போட்டிகளில் மொத்த புள்ளிகளின் அடிப்படையில் மட்/மாவட்டம் இரண்டாம் நிலையை பெற்றக்கொண்டது.
14. 2024 ஆம் ஆண்டு, 2021 LDO அனுமதிப்பத்திரங்களுக்கு அளிப்புக்கள் வழங்கப்பட்டள்ளன.

15. காணிக்கச்சேரி மூலம் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் - 1623 ஆகும்.

16. அறவிடப்பட்ட நீண்டகால, குறுகியகால குத்தகை தொடர்பான அறவீடுகள் - ரூபா 24,714,517.60

17. ஜனாதிபதியின் விசேட திட்டமான உரிமை திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட அளிப்புக்களின் எண்ணிக்கை – 943 ஆகும்.

18. ரூபா 562 மில்லியன் செலவில் கிறவல் வீதிகள் கிராமபுறங்களில் அமைத்ததன் மூலம் கிராமங்களை நகரங்களுடன் இணைத்தமை.

19. UNDP நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் 2 குடும்ப உறுப்பினர்களுக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட கும்பங்களுக்காக 206 வீடுகள் மற்றும் 50 கழிப்பறைகள், ரூபா 25 மில்லியன் நிதியீட்டத்தில் கட்டப்பட்டது.

20. 11 பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் குறிப்பாக கட்டிடம் மற்றும் விளையாட்டு மைதானம் என்பன ரூபா. 86.8 மில்லியன் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

21. 03 பொதுச் சந்தைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் குறிப்பாக கட்டிடம் முதலியவை ரூபா 44.2 மில்லியன் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

22. 182 விளையாட்டு மைதானங்கள் ரூபா 423.1 மில்லியன் செலவில் புனரமைக்கப்பட்டது.

23. பொது நூலகத்திற்கான உட்கட்டமைப்பு ரூபா 36.1 மில்லியன் செலவில் மேம்படுத்தப்பட்டது.

24. 64 கொங்கிறிட் வீதிகள் ரூபா 246.41 மில்லியன் செலவில் அமைக்கப்பட்டது.

25. சிவில் சமூகங்கள், விளையாட்டுக்கழகங்கள், கோவில்கள், மற்றும் சமூக அமைப்புக்கள் முதலியவற்றை வலுப்படுத்த ரூபா 670.65 மில்லியன் செலவில் 1203 கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டது.

26. பொருத்தமான பயனாளிகளுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக 270 ஆடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

27. உலக உணவுத் திட்டத்தின் மூலம் நிதியளிக்கப்பட்ட ர்புளுகு திட்டத்தின் கீழ் 61 கோழிப்பண்ணைகள் மற்றும் 28 விவசாயப்பண்ணைகள் ரூபா 39.77 மில்லியன் செலவில் அமைக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

28. சௌபாக்கியா உற்பத்திக் கிராம நிகழ்சித்திட்டத்தின் கீழ் 20 பயனாளிகளுக்கு 83 ஆடுகள் வழங்கப்பட்டன.

29. சமுர்த்தி வங்கிகளை நிகழ்நிலை முறைமைக்கு மாற்றியமைக்க நடவடிக்கை எடுத்தமை.

30. 2024 ஆம் ஆண்டில் 31 சமுர்த்தி வங்கிகளிலிருந்து ரூபா 437,771,465.59 மில்லியன் இலாபம் பெறப்பட்டது.

எதிர்நோக்கிய சவால்கள்

1. அஸ்வசும பயனாளி தெரிவு நடைபெற்ற காலப்பகுதியில் கிராம உத்தியோகத்தர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் இடம்பெற்றமை.

2. அஸ்வசும கணணிநிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் தொழிநுட்ப பிரச்சினைகளை சீர்செய்வதற்கான அங்கீகாரம் இன்மை

3. அஸ்வசும விண்ணப்பத்தினை வழங்கிய பயனாளிகள் அனைவருக்கும் கொடுப்பனவுகள் கிடைக்கப்பெறாமையினால் அவர்களிடமிருந்து அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றமை

4. திறன்விருத்தி மிக்க உத்தியோகத்தர்களை உருவாக்க தேவையான வளம்மிக்க பயிற்சிக்கூடம் ஒன்று மாவட்டத்தில் காணப்படாமை.

5. கர்ப்பிணித்தாய்மார்களுக்கான போசாக்கு பொதி விநியோகிப்பதில் நடைமுறை சிக்கல்களை எதிர்கொண்டமை.

6. முன்பள்ளிசிறார்களுக்கான பொதுவான பாடத்திட்டத்தை பின்பற்றுவதில் முன்பள்ளி ஆசிரியர்களது அசண்டையீனம்.

7. பாடசாலையில் மத்தியஸ்தம் செய்வதற்கான இடத்தினைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல்கள் காணப்பட்டமை.

8. மாகாண விளையாட்டு திணைக்களத்தினால் பிரதேச செயலக ரீதியாக வெற்றிடமாக காணப்படும் 08 விளையாட்டு உத்தியோகத்தர்கள் நீண்டகாலமாக நியமிக்கப்படாமை. மற்றும் மாவட்டத்தில் காணப்படும் விளையாட்டு பயிற்றுனருக்கான 03 வெற்றிடத்திற்கும் பொருத்தமான உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாமை.

9. பயிற்சிகளிற்கு தேவையான விளையாட்டு உபகரணங்கள் போதியளவு இல்லாமை

10. வீரர்களுக்கான பயிற்சியினை அளிப்பதற்கு பொருத்தமான நேர்த்தியான விளையாட்டு மைதானங்கள் குறைந்தளவில் காணப்படுகின்றமை.

11. அதிகளவான காணி அத்துமீறல்கள்

12. காணி முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட திணைக்களங்களினது போதியளவு ஒத்துழைப்பின்மை.

13. வருடத்தின் கடைசிக் காலாண்டில் ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெறுவதனால் குறுகியகாலத்தில் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் சிரமங்களை எதிர்கொண்டமை.

14. மீள்குடியேற்றத் திட்டத்தின்கீழ் 550 சதுர அடி வீட்டை ரூபா 1 மில்லியனுக்கும், 340 சதுர அடி வீட்டை ரூபா 6 இலட்சத்திற்கும் நிருமாணிப்பதற்காக வழங்கப்பட்ட தொகை குறிப்பிட்ட வீடுகளை கட்டிமுடிப்பதற்கு போதாமல் இருந்தமை.

15. விலை வாசி உயர்வினால் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்களை எதிர்கொண்டமை.

16. உற்பத்தித்துறையானது குறிப்பாக விவசாயம் ,கால்நடைகள், மற்றும் மீன்பிடித்துறைகளின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் எதிர்பாராத இயற்கை அனர்த்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டமை.

17. அடிக்கடி ஏற்படும் வெள்ள அனர்த்தம் வாழ்வாதாரங்களையும் உட்கட்டமைப்பு வசதி-களையும் பாதிப்படையச் செய்தமை.

18. வேலைவாய்ப்பின்மை அதனால் வருமானம் இன்மை என்பன பாதிக்கப்பட்ட சமுகங்களிடையே நிதி நிலமையில் பின்னடைவு ஏற்பட காரணமாக அமைந்தது.

19. பெரும்பாலான விவசாய நிலங்களுக்கு முறையான நீர்ப்பாசன வசதிகள் காணப்படாமை.
20. போதிய சந்தைவாய்ப்பின்மை களஞ்சிய வசதிகள் இன்மை சந்தைப்படுத்தல் பிரச்சினைகள் என்பன விவசாயத்துறையில் தாக்கத்தினை ஏற்படுத்தியமை.
21. கிராமப்புறங்களில் சுகாதார சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் காணப்படுகின்றமை.
22. திறன் விருத்தி மிக்க ஆளணியின்மை
23. சமுர்த்தி வங்கிகளில் நிகழ்நிலை மாற்றத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட காலதாமதம்.

எதிர்கால இலக்குகள்

1. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை சமூகநலகொடுப்பனவின் ஊடாக மேம்படுத்தல்.
2. ஆளணி வெற்றிடங்களை நிரப்புதல், வாண்மைவிருத்தி ஊடாக செயல்திறன்மிக்க ஊழல் அற்ற உத்தியோகத்தர்களை உருவாக்குதல்.
3. பௌதீக வளத்தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்வதன் ஊடாக சிறந்த அரசசேவையினை வழங்குதல்.
4. மாவட்டத்தில் இளைஞர் யுவதிகளின் மத்தியில் வேலைவாய்ப்பின்மையை குறைப்பதற்கான செயற் திட்டங்களை முன்னுரிமைப்படுத்தி நடைமுறைப்படுத்துவதுடன் மாற்றுத்திறனாளிகளின் தொழில்திறன் விருத்தியை மேம்படுத்தல்.
5. ஆரோக்கியமான சமூகப்பொறுப்புள்ள இளையோர் சமூகத்தை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
6. விவசாய உற்பத்தியை அதிகரிக்கும் முகமாக விவசாய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல். (நெல்,மேட்டுநில பயிர்ச்செய்கை, தெங்குப் பயிர்ச்செய்கை)
7. மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்காக புதிய தொழில்நுட்பமுறைகளை அறிமுகப்படுத்துவதுடன் உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
8. குடிநீர் மற்றும் மின்சார வசதியற்ற கிராமங்களை இல்லாதொழித்தல்.
9. மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.
10. பெண்களுக்கான பொருளாதார மேம்பாட்டு நிகழ்ச்சிதிட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தல்.
11. ஆரோக்கியமான எதிர்கால சந்ததியினை உருவாக்கும் தாய்சேய் செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
12. தேர்ச்சியுள்ள, சிறந்த விழுமியங்கள் உள்ள மாணவ சமுதாயத்தை கட்டியெழுப்பும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
13. சூழல் நேயமிக்க சமூகப் பொறுப்புவாய்ந்த சமுதாயத்தை கட்டியெழுப்புதல்.
14. எமது மாவட்டத்திற்கான கலை கலாசார விழுமியங்களை பேணும் செயற்திட்டங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல்.
15. காணிப்பயன்பாடு மற்றும் முகாமைத்துவ நடைமுறைகளை வினைத்திறனாக செயற்படுத்தல்.
16. மாவட்டத்தில் அனர்த்த தடுப்பு உபாய மார்க்கங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதன் ஊடாக அனர்த்தத்தினை தவிர்த்தல்.

மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்,

மாவட்ட செயலகம்,

மட்டக்களப்பு.

Mrs.J.J.Muraleetharan
Government Agent & District Secretary
Batticaloa.

அத்தியாயம் 03 31.12.2024 வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச்செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று

ACA-F

ஏசீஏ- எப்

2024 டிசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

திணைக்களம்:	மாவட்ட செயலகம், மட்டக்களப்பு
தலைப்பு	269

(ரூபா)

திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2024		குறிப்பு	உண்மை நிலை 2024	திருத்தப்பட்ட 2023	
-	வருமானப் பெறுகைகள்		-		
-	வருமான வரி	1	-	-	
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	ஏசீஏ-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		-	-	
			-		
-	வருமானம் பெறுகைகள்		-		
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		7,500,195,800	4,745,227,996	ஏசீஏ-3
-	வைப்புகள்		557,261,392	435,714,327	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		73,018,731	56,789,751	ஏசீஏ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)		**8,130,475,923**	**5,237,732,074**	
-	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		**8,130,475,923**	**5,237,732,074**	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		3,118,763	28,948,281	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		**8,127,357,160**	**5,208,783,793**	
			-		
	கழி : செலவினம்		-		
-	மீண்டுவரும் செலவினம்		-		
1,682,500,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	1,658,938,843	1,113,297,977	
223,800,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	202,424,250	145,731,597	ஏசீஏ-2(ii)
610,048,920	மானியங்கள், கொடைகள மற்றும் மாற்றல்கள்	7	596,455,255	509,462,253	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	-	
2,516,348,920	மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)		**2,457,818,349**	**1,768,491,828**	
-			-	-	
-	மூலதனம் செலவினம்		-	-	
31,000,000	மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	26,315,788	16,142,272	
199,500,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	199,494,555	253,688,233	
	மூலதன மாற்றல்கள்	12	-	-	ஏசீஏ-2(ii)
	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
4,500,000	மனித வள அபிவிருத்தி	14	4,023,439	2,634,732	
	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	-	-	
235,000,000	மொத்த மூலதனம் செலவினம் (எ)		**229,833,782**	**272,465,238**	
	வைப்புக் கொடுப்பனவுகள்		471,664,548	433,872,789	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		123,183,046	46,021,167	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்			-	
	மொத்த பிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		**594,847,594**	**479,893,956**	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+ எ+ ஏ)		**3,282,499,724**	**2,520,851,021**	
-	டிசம்பர் 31ல் உள்ளவாறான மீதி ஒ = (உ-ஐ)		**4,844,857,436**	**2,687,932,772**	
				-	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		**4,832,328,617**	**2,687,932,772**	ஏசீஏ-7
	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		12,528,820	-	ஏசீஏ-3

3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ -பீ

2024 டிசம்பர் 31ல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

திணைக்களம்	மாவட்ட செயலகம், மட்டக்களப்பு
தலைப்பு	269

		உண்மை நிலை	
	குறிப்பு	2024	2023
		ரூபா	ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	3,091,277,339	2,865,447,727
		-	-
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	186,341,303	136,176,988
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**3,277,618,642**	**3,001,624,714**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		23,323,819	46,227,528
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்	ஏசீஏ-6	3,091,277,339	2,865,447,727
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ	-	-
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	175,546,303	89,949,459
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	(12,528,820)	-
மொத்தப் பொறுப்புக்கள்		**3,277,618,642**	**3,001,624,714**

பக்க இலக்கம் 06 முதல் 30 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் இணைப்புகளின் பக்க இலக்கம் 31 முதல் 41 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் இணைப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

திருமதி.ர.காயத்திரி	திருமதி.ஜே.ஜே.முரளிதரன்	திரு.எஸ்.ஆலோக்கபண்டார
பிரதம கணக்காளர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
மாவட்டச் செயலகம்,மட்டக்களப்பு	மாவட்டச் செயலாளர்	செயலாளர், பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
2025.02.14	மாவட்டச் செயலகம்,மட்டக்களப்பு	2025.02. 17
	2025.02.14	
Mrs.R.GAYATHIRY Chief Accountant For District Secretary District Secretariat Batticaloa.	Mrs.J.J.Muraleetharan Government Agent & District Secretary Batticaloa.	எஸ். ஆலோகபண்டார செயலாளர் பொது நிர்வாக. மாகாண சபைகள் மற்று உள்ளூராட்சி அமைச்சு

3.3 காசுப்பாய்ச்சல் பற்றிய கூற்று

ACA-C

ஏசீஏ- சீ

2024 டிசம்பர் 31ல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

திணைக்களம்: மாவட்டச் செயலகம்,மட்டக்களப்பு

தலைப்பு: 269

	உண்மை	
		திருத்தப்பட்ட
	2024	2023
	ரூபா	ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	157,333,896	158,547,689
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	7,500,195,800	4,745,227,996
முற்பணங்களை அறவிடல்	72,858,703	82,015,475
வைப்புக்களின் பெறுகை	557,261,392	435,714,327
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**8,287,649,790**	**5,421,505,486**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள்	1,843,953,369	1,099,192,027
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	596,455,255	655,193,850
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	5,056,434,790	2,864,823,247
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	3,118,763	28,948,281
முற்பணக் கொடுப்பனவு	73,660,464	67,010,054
வைப்புக் கொடுப்பனவு	471,664,548	433,872,789
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**8,045,287,189**	**5,149,040,248**
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**242,362,601**	**272,465,238**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	229,833,782	272,465,238
	-	-
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**229,833,782**	**272,465,238**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(229,833,782)**	**(272,465,238)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ + ஊ)	**12,528,820**	**0**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
	-	-
கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:	-	-
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) -(ஒ)	**12,528,820**	**0**
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

3.4 நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

ACA - 1

ஏசீஏ - 1

2024 டிசம்பர் 31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான வருமானக் கூற்று

செலவின தலைப்பு: 269

திணைக்களம்: மாவட்டச் செயலகம், மட்டக்களப்பு

ரூபா

அரசிறை குறியீடு	வருமானத் தலைப்பு	வருமான மதிப்பீடு (1)		வருமானத்தைத் திரட்டுதல் (2)			(3)	வருமானத்திலிருந்து மீளச்செலுத்துதல் (4)			(5)
		மூல மதிப்பீடு	திருத்திய மதிப்பீடு	தொடர்புடைய அமைச்சினால்/ திணைக்களத்தினால்திரட்டப்பட்டது	ஏனைய அமைச்சினால்/ திணைக்களத்தினால்திரட்டப்பட்டது (Table 66/SA-21)	மொத்தம்	நிலுவை வருமானங்களை திரட்டுதல்	காசாக	தவறுகளைத் திருத்துதல்	மொத்தம்	தேறிய வருமானம்
		1(i)	1(ii)	2(i)	2(ii)	2(iii)=2(i)+2(ii)	(3)	4(i)	4(ii)	4(iii)=4(i)+4(ii)	5=2(iii)+(3) -4(iii)
		இல்லை									

திருமதி.ர.காயத்திரி
பிரதம கணக்காளர்
மாவட்டச் செயலகம்,மட்டக்களப்பு
2025.02.14

Mrs.R.GAYATHIRY
Chief Accountant
For District Secretary
District Secretariat
Batticaloa.

திருமதி.ஜே.ஜே.முரளிதரன்
கணக்கீட்டு உத்தியோகத்தர்
மாவட்டச் செயலகம்,மட்டக்களப்பு
2025.02.14

Mrs.J.J.Muraleetharan
Government Agent & District Secretary
Batticaloa.

ACA – 2II

ஏசீஏ-2(ii)

2024 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான செலவினக் கூற்று

செலவின தலைப்பு இல : 269

திணைக்களம்: மாவட்டச் செயலகம், மட்டக்களப்பு

ரூபா

செலவினக் குறியீடு	குறிப்பு	நிதியிடல் (குறியீட்டு இல.)	ஏற்பாடுகள்				செலவினம்			தேறிய விளைவு		
			வருடாந்த வரவு செலவு ஏற்பாடு	குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு	நி.ஒ 66/69 மாற்றல்கள்	மொத்தத் தேறிய ஏற்பாடு	காசுப் புத்தகத்தின் பிரகாரம் செலவினம்	நி.ஒ. 208 இன் கீழ் ஏனைய அமைச்சுக்களினால்/திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் (திறைசேரியின் அச்சுக் குறிப்புகளின் பிரகாரம்)	மொத்தச் செலவினம்	சேமிப்பு / மிகை	திருத்தப்பட்ட மதிப்பீட்டின் % சதவீதமாக சேமிப்பு / மிகை	வேறுபாட்டுக்கான காரணம்
			(1)	(2)	(3) (-)/+	(4)=(1)+(2)+(3)	(5)	(6)	(7)= (5)+(6)	(8)=(4)-(7)	(9)=(8)/(4)*100	
மீண்டுவரும் செலவினம்												
269-1-1-0												
நிகழ்ச்சித் திட்டம்/கருத்திட்டம்/உப கருத்திட்டம்/குறியீடு												
கூலி, சம்பளம் மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் செலவு விடயரீதியான வகுப்பீடு	5											
ஆளுக்குரிய வேதனங்கள்												
1001 சம்பளமும் கூலியும்		11	318,000,000	-	(11,500,000)	306,500,000	294,224,290		294,224,290	12,275,710	4.01	5% ற்கு குறைவு
1002 மேலதிக நேர மற்றும் ஏனைய படிகள்		11	12,000,000	-	-	12,000,000	11,892,492		11,892,492	107,508	0.90	5% ற்கு குறைவு
1003 ஏனைய கொடுப்பனவுகள்		11	167,000,000	26,180,000	11,500,000	204,680,000	199,263,091	2,632,225	201,895,316	2,784,684	1.36	5% ற்கு குறைவு
மொத்தம்			**497,000,000**	**26,180,000**	-	**523,180,000**	**505,379,873**	**2,632,225**	**508,012,098**	**15,167,902**	**2.90**	
செலவு விடயரீதியான ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்	6											
பிரயாணச் செலவினம்												
1101 உள்ளூர்		11	2,300,000			2,300,000	1,918,942		1,918,942	381,058	16.57	இந்த ஆண்டில் இரண்டு தேர்தல்கள் நடத்தப்பட்டதால் கட்டுப்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டது மற்றும் எதிர்பார்க்கப்பட்ட பயணங்கள் நடக்கவில்லை.
மொத்தம் (அ)			**2,300,000**	-	-	**2,300,000**	**1,918,942**	-	**1,918,942**	**381,058**	**16.57**	
வழங்கல்கள்												
1201 எழுதுகருவிகளும் அலுவலக உபகரணங்களும்		11	10,000,000	-	-	10,000,000	9,990,036		9,990,036	9,964	0.10	5% ற்கு குறைவு
1202 -002 எரிபொருள் கொடுப்பனவு		11	5,600,000	-		5,600,000	4,479,855		4,479,855	1,120,145	20.00	அதிகாரிகளின் காலியிடங்கள் மற்றும் எரிபொருள் விலை குறைப்பு ஆகியவை சேமிப்பை ஏற்படுத்தியது.
1202- 009 குழும வாகனங்களுக்கான எரிபொருள்		11	6,500,000			6,500,000	6,500,000		6,500,000	-	-	
1202- 010 பிற நோக்கத்திற்கான எரிபொருள்		11	1,500,000			1,500,000	119,960		119,960	1,380,040	92.00	எதிர்பார்த்த ஜெனரேட்டர் பயன்பாடுகள் எழவில்லை மற்றும் எரிபொருள் விலை மிதப்பதால் சேமிப்பு ஏற்பட்டது
1203 - உணவும் சீருடைகளும்		11	200,000	-		200,000	136,000		136,000	64,000	32.00	தேவை ஏற்படாமை
1205- ஏனையவை		11	100,000			100,000	100,000		100,000	0	0.00	
மொத்தம் (ஆ)			**23,900,000**	-	-	**23,900,000**	**21,325,852**	-	**21,325,852**	**2,574,148**	**10.77**	
பராமரிப்புச் செலவினங்கள்												
1301 வாகனங்கள்		11	15,900,000	-	-	15,900,000	15,755,749		15,755,749	144,251	0.91	5% ற்கு குறைவு
1302 பொறி, இயந்திரம், உபகரணம்		11	2,900,000	-	-	2,900,000	1,973,624		1,973,624	926,376	31.94	அலுவலக உபகரணங்களை செலவு குறைந்த வகையில் பராமரிக்கப்பட்டது
1303 கட்டிடங்களும் கட்டமைப்புக்களும்		11	6,000,000	-		6,000,000	5,999,718		5,999,718	282	0.00	
1304- மென்பொருள் பராமரிப்பு			600,000			600,000	600,000		600,000	-	-	
மொத்தம் (இ)			**25,400,000**	-	-	**25,400,000**	**24,329,091**	-	**24,329,091**	**1,070,909**	**4.22**	
சேவைகள்												
1401 - போக்குவரத்து		11	2,500,000	-		2,500,000	528,615		528,615	1,971,385	78.86	அதிகாரிகளின் காலியிடங்கள் மற்றும் பிற போக்குவரத்து பணியமர்த்தல் தேவை எழவில்லை
1402 - தபால், தொலைத்தொடர்பு		11	5,000,000	-		5,000,000	3,171,157		3,171,157	1,828,843	36.58	கட்டுப்படுத்தப்பட்டது
1403 - மின்சாரமும் நீரும்		11	15,000,000	-		15,000,000	11,885,675		11,885,675	3,114,325	20.76	மின்சாரம் மற்றும் நீர் பயன்பாடு மீது கட்டுப்பாடு மேற்கொள்ளப்பட்டது
1404 - வாடகையும், உள்ளூராட்சி சபைகளுக்கான வரியும்		11	500,000	-		500,000	166,319		166,319	333,681	66.74	தேவை ஏற்படாமை
1405- சுத்தம் மற்றும் சுத்தம் செய்யும் சேவைகள்		11	4,000,000			4,000,000	4,000,000		4,000,000	-	-	
1407- பாதுகாப்பு சேவைகள்		11	5,000,000			5,000,000	4,940,145		4,940,145	59,855	1.20	5% ற்கு குறைவு
1409-138 இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரண சேவை ஒப்பந்தம்		11	2,800,000	-		2,800,000	703,305		703,305	2,096,695	74.88	அலுவலக உபகரணங்களும் இயந்திரங்களும் செலவு குறைந்த வகையில் பராமரிக்கப்பட்டன
1409-139 வாகனக் காப்புறுதி		11	1,700,000			1,700,000	904,189		904,189	795,811	46.81	தேவை ஏற்படாமை
1409-140 இதர சேவை செலவுகள்		11	3,200,000			3,200,000	3,200,000		3,200,000	-	-	
மொத்தம் (ஈ)			**39,700,000**	-	-	**39,700,000**	**29,499,404**	-	**29,499,404**	**10,200,596**	**25.69**	
ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான மொத்தச் செலவினம் (அ+ஆ+இ+ஈ)			91,300,000	-	-	91,300,000	77,073,289	-	77,073,289	14,226,711	15.58	

ACA – 2II

ஏசீஏ-2(ii)

2024 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான செலவினக் கூற்று

செலவின தலைப்பு இல : 269

திணைக்களம்: மாவட்டச் செயலகம், மட்டக்களப்பு

ரூபா

செலவினக் குறியீடு	குறிப்பு	நிதியிடல் (குறியீட்டு இல.)	ஏற்பாடுகள்: வருடாந்த வரவு செலவு ஏற்பாடு	ஏற்பாடுகள்: குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு	ஏற்பாடுகள்: நி.ஒ 66/69 மாற்றல்கள்	ஏற்பாடுகள்: மொத்தத் தேறிய ஏற்பாடு	செலவினம்: காசுப் புத்தகத்தின் பிரகாரம் செலவினம்	செலவினம்: நி.ஒ. 208 இன் கீழ் ஏனைய அமைச்சுக்களினால்/திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் (திறைசேரியின் அச்சுக் குறிப்புகளின் பிரகாரம்)	செலவினம்: மொத்தச் செலவினம்	தேறிய விளைவு: சேமிப்பு / மிகை	தேறிய விளைவு: திருத்தப்பட்ட மதிப்பீட்டின் % சதவீதமாக சேமிப்பு / மிகை	தேறிய விளைவு: வேறுபாட்டுக்கான காரணம்
			(1)	(2)	(3) (-)/+	(4)=(1)+(2)+(3)	(5)	(6)	(7)= (5)+(6)	(8)=(4)-(7)	(9)=(8)/(4)*100	
செலவு விடயரீதியான மாற்றங்கள், நன்கொடைகள், மானியங்கள்	7											
மாற்றங்கள்												
1504-அபிவிருத்தி மானியங்கள் (தேறு கொள்வனவு)		11		606,848,920		606,848,920	594,337,022		594,337,022	12,511,898	2.06	5% ற்கு குறைவு
1506 அரசாங்க ஊழியர்களுக்கான உடமைக் கடன் வட்டி		11	1,400,000	-		1,400,000	730,363		730,363	669,637	47.83	தேவை ஏற்படாமை
செலவு விடயரீதியான ஏனைய மீண்டுவரும் செலவினம்	9									-		
1701 - நட்டங்களும் பதிவழிப்பும் நிகழத்தக்க சேவைகள்		11	300,000	-	-	300,000	-		-	300,000	100.00	தேவை ஏற்படாமை
			1,700,000	606,848,920	-	608,548,920	595,067,385	-	595,067,385	13,481,535	2.22	
நிகழ்ச்சித் திட்டம் (1)												
முழு மொத்தம் (குறிப்பு 5 முதல் 9 வரை) மொத்த மீண்டுவரும் செலவினம்			590,000,000	633,028,920	-	1,223,028,920	1,177,520,547	2,632,225	1,180,152,772	42,876,148	3.51	
மூலதனம் செலவினம்												
நிகழ்ச்சித் திட்டம் (1)												
பொது முதலீடுகளின் செலவு விடயரீதியான வகுப்பீடு												
மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும்	10											
2001 கட்டிடங்களும் கட்டமைப்புக்களும்		11	17,000,000	-	-	17,000,000	16,848,518		16,848,518	151,482	0.89	5% ற்கு குறைவு
2002 பொறி, இயந்திரம், உபகரணம்		11	5,500,000	-	-	5,500,000	4,399,450		4,399,450	1,100,550	20.01	எதிர்பார்த்த பெரிய பழுது ஏற்படவில்லை.
2003 வாகனங்கள்		11	8,500,000	-	-	8,500,000	5,067,820		5,067,820	3,432,180	40.38	எதிர்பார்த்த பெரிய வாகனப் பழுது ஏற்படவில்லை.
மொத்தம் (அ)			31,000,000	-	-	31,000,000	26,315,788	-	26,315,788	4,684,212	15.11	
மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11											
2102 தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும்		11	12,000,000	75,000,000	-	87,000,000	86,996,068		86,996,068	3,932	0.00	
2103 பொறி, இயந்திரம், உபகரணம்		11	12,000,000	-	-	12,000,000	11,998,486		11,998,486	1,514	0.01	5% ற்கு குறைவு
2104 -புதிய மாவட்ட செயலக கட்டடம்		11	100,500,000	-	-	100,500,000	100,500,000		100,500,000	-	-	
மொத்தம் (ஆ)			124,500,000	75,000,000	-	199,500,000	199,494,555	-	199,494,555	5,445	0.00	
மனித வள அபிவிருத்தி	14											
2401 பயிற்சியும், இயலளவு கட்டியெழுப்புதலும்		11	3,000,000	-	-	3,000,000	2,548,884		2,548,884	451,116	15.04	இந்த ஆண்டில் இரண்டு தேர்தல்கள் நடைபெற்றதால், எதிர்பார்த்த பயிற்சித் திட்டங்கள் நடைபெறவில்லை.
மொத்தம் (உ)			3,000,000	-		3,000,000	2,548,884	-	2,548,884	451,116	15.04	
நிகழ்ச்சித் திட்டம் (1)												
பொது முதலீட்டின் மீதான மொத்தச் செலவினங்கள் (அ+ஆ+இ+ஈ+உ)			158,500,000	75,000,000	-	233,500,000	228,359,227	-	228,359,227	5,140,773	2.20	
269-1-1-0- மொத்தம்			748,500,000	708,028,920	-	1,456,528,920	1,405,879,774	2,632,225	1,408,511,999	48,016,921	3.30	
மீண்டுவரும் செலவினம்												
269-1-2-0												
நிகழ்ச்சித் திட்டம்/கருத்திட்டம்/உப கருத்திட்டம்/குறியீடு												
கூலி, சம்பளம் மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் செலவு விடயரீதியான வகுப்பீடு	5											
ஆளுக்குரிய வேதனங்கள்												
1001 சம்பளமும் கூலியும்		11	690,000,000	-	(36,000,000)	654,000,000	649,258,508		649,258,508	4,741,492	0.72	5% ற்கு குறைவு
1002 மேலதிக நேர மற்றும் ஏனைய படிகள்		11	21,000,000	-	-	21,000,000	20,751,291		20,751,291	248,709	1.18	5% ற்கு குறைவு
1003 ஏனைய கொடுப்பனவுகள்		11	335,000,000	113,320,000	36,000,000	484,320,000	466,139,447	14,777,500	480,916,947	3,403,053	0.70	5% ற்கு குறைவு
மொத்தம்			1,046,000,000	113,320,000	-	1,159,320,000	1,136,149,246	14,777,500	1,150,926,746	8,393,254	0.72	

ACA – 2II

ஏசீஏ-2(ii)

2024 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான செலவினக் கூற்று

செலவின தலைப்பு இல : 269

திணைக்களம்: மாவட்டச் செயலகம், மட்டக்களப்பு

ரூபா

செலவினக் குறியீடு	குறிப்பு	நிதியிடல் (குறியீட்டு இல.)	ஏற்பாடுகள்: வருடாந்த வரவு செலவு ஏற்பாடு	குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு	நி.ஒ 66/69 மாற்றல்கள்	மொத்தத் தேறிய ஏற்பாடு	செலவினம்: காசுப் புத்தகத்தின் பிரகாரம் செலவினம்	நி.ஒ. 208 இன் கீழ் ஏனைய அமைச்சுக்களினால்/திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் (திறைசேரியின் அச்சுக் குறிப்புகளின் பிரகாரம்)	மொத்தச் செலவினம்	தேறிய விளைவு: சேமிப்பு / மிகை	திருத்தப்பட்ட மதிப்பீட்டின் % சதவீதமாக சேமிப்பு / மிகை	வேறுபாட்டுக்கான காரணம்
			(1)	(2)	(3) (-)/+	(4)=(1)+(2)+(3)	(5)	(6)	(7)= (5)+(6)	(8)=(4)-(7)	(9)=(8)/(4)*100	
செலவு விடயரீதியான ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்	6											
பிரயாணச் செலவினம்												
1101 உள்ளூர்		11	11,000,000		(3,600,000)	7,400,000	6,709,002		6,709,002	690,998	9.34	இந்த ஆண்டில் இரண்டு தேர்தல்கள் நடத்தப்பட்டதால் கட்டுப்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டது மற்றும் எதிர்பார்க்கப்பட்ட பயணங்கள் நடக்கவில்லை.
மொத்தம் (அ)			**11,000,000**	-	**(3,600,000)**	**7,400,000**	**6,709,002**	-	**6,709,002**	**690,998**	**9.34**	
வழங்கல்கள்												
1201 எழுதுகருவிகளும் அலுவலக உபகரணங்களும்		11	13,000,000	-	-	13,000,000	12,998,879		12,998,879	1,121	0.01	5% ற்கு குறைவு
1202 -002 எரிபொருள் கொடுப்பனவு		11	10,000,000	-	(1,000,000)	9,000,000	8,634,857		8,634,857	365,143	4.06	5% ற்கு குறைவு
1202- 009 குழும வாகனங்களுக்கான எரிபொருள்		11	14,300,000			14,300,000	11,593,817		11,593,817	2,706,183	18.92	கட்டுப்படுத்தப்பட்டது மற்றும் எரிபொருள் விலை மிதப்பதால் சேமிப்பு ஏற்பட்டது
1202- 010 பிற நோக்கத்திற்கான எரிபொருள்		11	1,000,000		(890,000)	110,000	79,495		79,495	30,505	27.73	எதிர்பார்த்த ஜெனரேட்டர் பயன்பாடுகள் எழவில்லை மற்றும் எரிபொருள் விலை மிதப்பதால் சேமிப்பு ஏற்பட்டது
1203 - 002 உணவும் சீருடைகளும்		11	700,000	-	(248,000)	452,000	452,000		452,000	0	0.00	
மொத்தம் (ஆ)			**39,000,000**	-	**(2,138,000)**	**36,862,000**	**33,759,048**	-	**33,759,048**	**3,102,952**	**8.42**	
பராமரிப்புச் செலவினங்கள்												
1301 வாகனங்கள்		11	13,000,000	-	-	13,000,000	12,940,848		12,940,848	59,152	0.46	5% ற்கு குறைவு
1302 பொறி, இயந்திரம், உபகரணம்		11	5,000,000	-	-	5,000,000	4,989,620		4,989,620	10,380	0.21	5% ற்கு குறைவு
1303 கட்டிடங்களும் கட்டமைப்புக்களும்		11	10,000,000	-	11,500,000	21,500,000	21,438,651		21,438,651	61,349	0.29	5% ற்கு குறைவு
1304- மென்பொருள் பராமரிப்பு		11	3,000,000		(1,600,000)	1,400,000	1,336,776		1,336,776	63,224	4.52	5% ற்கு குறைவு
மொத்தம் (இ)			**31,000,000**	-	**9,900,000**	**40,900,000**	**40,705,895**	-	**40,705,895**	**194,105**	**0.47**	
சேவைகள்												
1401 போக்குவரத்து		11	2,000,000	-	(600,000)	1,400,000	1,400,000		1,400,000	-	-	
1402 தபால், தொலைத்தொடர்பு		11	11,000,000	-	-	11,000,000	9,382,163		9,382,163	1,617,837	14.71	கட்டுப்படுத்தப்பட்டது
1403 மின்சாரமும் நீரும்		11	14,000,000	-	-	14,000,000	13,713,848		13,713,848	286,152	2.04	5% ற்கு குறைவு
1404 வாடகையும், உள்ளூராட்சி சபைகளுக்கான வரியும்		11	500,000	-	(300,000)	200,000	192,396		192,396	7,604	3.80	5% ற்கு குறைவு
1405- சுத்தம் மற்றும் சுத்தம் செய்யும் சேவைகள்		11	5,000,000		300,000	5,300,000	5,223,950		5,223,950	76,050	1.43	5% ற்கு குறைவு
1407- பாதுகாப்பு சேவைகள்		11	8,000,000			8,000,000	7,558,759		7,558,759	441,241	5.52	தேவை ஏற்படாமை
1409-138 இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரண சேவை ஒப்பந்தம்		11	4,000,000	-	(1,277,750)	2,722,250	2,316,342		2,316,342	405,908	14.91	அலுவலக உபகரணங்களை செலவு குறைந்த வகையில் பராமரிக்கப்பட்டது
1409-139 வாகனக் காப்புறுதி		11	2,000,000		(284,250)	1,715,750	1,394,627		1,394,627	321,123	18.72	தேவை ஏற்படாமை
1409-140 இதர சேவை செலவுகள்		11	3,000,000			3,000,000	2,994,931		2,994,931	5,069	0.17	5% ற்கு குறைவு
மொத்தம் (ஈ)			**49,500,000**	-	**(2,162,000)**	**47,338,000**	**44,177,016**	-	**44,177,016**	**3,160,984**	**6.68**	
ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான மொத்தச் செலவினம் (அ+ஆ+இ+ஈ)			**130,500,000**	-	**2,000,000**	**132,500,000**	**125,350,961**	-	**125,350,961**	**7,149,039**	**5.40**	
செலவு விடயரீதியான மாற்றங்கள், நன்கொடைகள், மானியங்கள்	7											
மாற்றங்கள்												
1506 அரசாங்க ஊழியர்களுக்கான உடமைக் கடன் வட்டி		11	3,500,000	-	(2,000,000)	1,500,000	1,387,870		1,387,870	112,130	7.48	தேவை ஏற்படாமை
மொத்தம்			3,500,000	-	(2,000,000)	1,500,000	1,387,870	-	1,387,870	112,130	7.48	
நிகழ்ச்சித் திட்டம் (1)												
		252-1-1-0-1402	11	103,880.00	81,927.33	78.87
		252-1-1-0-1403	11	45,000.00	45,000.00	100.00
		252-1-1-0-1409-138	11	23,334.50	23,334.50	100.00
		252-1-1-0-1409-140	11	3,000.00	3,000.00	100.00
		252-1-1-0-1409-34	11	169,000.00	169,000.00	100.00
		252-1-1-0-2001	11	998,500.00	892,579.29	89.39
		252-1-1-0-2102	11	1,262,510.00	1,251,457.50	99.12
		252-1-1-8-2507-13	11	22,826,269.92	21,465,065.71	94.04
32	ஓய்வூதியத் திணைக்களம்	253-1-2-0-1002	11	210,000.00	203,128.98	96.73
		253-1-2-0-1101	11	35,000.00	22,534.00	64.38
		253-1-2-1-1502-1	11	6,420,000.00	5,635,054.50	87.77
		253-1-2-3-1502-7	11	120,000.00	101,000.00	84.17
		253-1-2-3-1502-8	11	80,000.00	80,000.00	100.00
		253-1-2-4-1502-12	11	463,947.00	463,947.00	100.00
		253-1-2-2-1502-2	21	3,985,000.00	3,651,428.84	91.63
33	பதிவாளர் நாயகம் திணைக்களம்	254-1-2-0-2001	11	13,214,000.00	13,068,000.49	98.90
34	வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்	284-1-1-0-1508	11	15,017,000.00	15,013,031.90	99.97
35	காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்	286-2-1-0-1001	11	8,053,600.00	7,870,685.39	97.73
		286-2-1-0-1003	11	5,926,400.00	5,750,601.29	97.03
36	கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம்	290-1-1-0-2001	11	1,202,277.18	1,202,277.18	100.00

37	புடவைக் கைத்தொழில் திணைக்களம்	303-2-1-0-1501	11	66,000.00	66,000.00	100.00
38	மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்	307-2-1-0-1002	11	465,500.00	465,251.00	99.95
		307-2-1-0-1003	11	103,000.00	103,000.00	100.00
		307-2-1-0-1101	11	10,000.00	10,000.00	100.00
		307-2-1-0-1201	11	50,000.00	50,000.00	100.00
		307-2-1-0-1302	11	111,000.00	110,932.62	99.94
		307-2-1-0-1303	11	10,000.00	10,000.00	100.00
		307-2-1-0-1402	11	43,000.00	42,999.10	100.00
		307-2-1-0-1403	11	269,000.00	268,999.57	100.00
		307-2-1-0-1404	11	36,400.00	36,315.92	99.77
		307-2-1-0-1405	11	42,000.00	42,000.00	100.00
		307-2-1-0-1407	11	977,000.00	969,935.60	99.28
		307-2-1-0-1409-140	11	6,000.00	5,877.26	97.95
		307-2-1-6-1409	11	51,000.00	51,000.00	100.00
39	சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களம்	326-1-1-0-1101	11	756,000.00	428,791.80	56.72
		326-1-1-0-1201	11	42,000.00	36,000.00	85.71
40	காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்	327-2-1-0-1101	11	420,000.00	420,000.00	100.00
		327-2-1-0-1201	11	70,000.00	69,999.59	100.00
		327-2-1-0-1403	11	53,196.10	53,196.10	100.00
		327-2-1-0-2102	11	300,000.00	299,115.00	99.71
		327-2-1-0-2507	11	1,334,000.00	1,324,518.00	99.29
		327-2-1-0-2509	11	161,000.00	161,000.00	100.00
41	மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்	328-1-1-0-1101	11	856,000.00	722,375.37	84.39
		328-1-1-0-1201	11	43,500.00	43,499.20	100.00
		328-1-1-0-1402	11	44,500.00	36,934.56	83.00
		328-1-1-0-1403	11	36,000.00	23,525.59	65.35
		328-2-2-11-2509	11	466,750.00	448,750.00	96.14

3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

ரூபா.'000'

ஆதன குறியீடு	குறியீட்டு விபரம்	2024.12.31 திகதிய சுற்றாய்வுச் சபை அறிக்கை படி மீதி	2024.12.31 திகதிய நிதி நிலைமை அறிக்கை படி மீதி	எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியது	அறிக்கையிடல் முன்னேற்றம் %
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	1,378,498,536.92	1,378,498,536.92	-	100%
9152	இயந்திரம் மற்றும் உபகரணம்	630,646,421.51	630,646,421.51	-	100%
9153	காணி	558,896,400.00	558,896,400.00	-	100%
9154	அருவமான சொத்துக்கள்	-	-	-	-
9155	உயிரியல் சொத்துக்கள்	-	-	-	-
9160	நடைபெறும் பணிகள்	523,235,981.00	523,235,981.00	-	100%
9180	குத்தகை சொத்துக்கள்	-	-	-	-

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. EPCG/BT/A/DSBT/02/2024/01
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date 2025 மே 30

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය මඩකලපුව
30 MAY 2025
மாவட்ட செயலகம் மட்டக்களப்பு

மாவட்ட செயலாளர்
மாவட்ட செயலகம்
மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை.

மேற்படி அறிக்கையுடன் சேர்த்து கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் இத்துடன் அனுப்பப்பட்டுள்ளது.

M.H.M. அறபாத்
சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக.

பிரதி :- பணிப்பாளர் நாயகம், அரச கணக்குகள் திணைக்களம், பொதுத் திறைசேரி.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. EPCG/BT/A/DSBT/02/2024/01 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2025 மே 30

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය මඩකලපුව
30 MAY 2025
மாவட்ட செயலகம் மட்டக்களப்பு

மாவட்ட செயலாளர்
மாவட்ட செயலகம்
மட்டக்களப்பு

தலைப்பு 269 - மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை.

---

1. **நிதிக்கூற்றுக்கள்**

1.1 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 269 - மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்படும் இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 29 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்களில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இலக்கம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

1.2 **கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 **விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை**

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு இலக்கம் 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை மட்டக்களப்பு மாவட்ட செயலகம், பொதுத் திறைசேரி மற்றும் பாராளுமன்றத்தின் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 **நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

Page **2** of **24**

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

1.5 **நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல்,தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 முற்பணக் கொடுப்பனவுகள்

மாவட்ட செயலகம் மீளாய்வாண்டின் இறுதி மாதமாகிய டிம்பர் மாதத்திற்கான மின்சாரக் கட்டணங்கள், நீர் வழங்கள் கட்டணங்கள் மற்றும் தொலைத் தொடர்பு கட்டணங்கள் என்பவற்றிக்கான கொடுப்பனவுகளை முன்னைய மாதங்களின் கட்டணங்களை அடிப்படையாக வைத்து மதிப்பிட்டு கூட்டு மொத்தமாக ரூபா 914,416 தொகை கொடுப்பனவுகள் மேற்கொண்டுள்ளமை அவதானிக்கப்பட்டள்ளது. இருந்தும், இவ் முற்பணக் கொடுப்பனவுகள் தொடர்பில் நிதிக் கூற்றுக்களின முற்பண கணக்குகளின் கூற்றில் ACA-5(A) வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.6.2 நிதியல்லாத சொத்துக்கள்

(அ) கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம், மாவட்ட செயலகம் மற்றும் 14 பிரதேச செயலகங்களில் அடையாளம் காணப்பட்ட காணிகளின் பரப்பளவு 24 ஹெக்டேயர் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன், நிதி நிலைமை கூற்றில் (ACA-P) நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் அதன் பெறுமதி ரூபா 559 மில்லியன் என காட்டப்பட்டிருந்தது. எனினும், 03 பிரதேச செயலகங்களுக்கு உரித்தான ரூபா 23 மில்லியன் பெறுமதியான காணிகளின் உரிமையை பெற்றுக் கொள்வதற்கு 05 வருடங்களுக்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி, மாவட்டத்திலுள்ள 10 பிரதேச செயலகங்களில் 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் அரச செயற்திட்ட நிறுவனங்கள் மூலம் பல்வேறு நிகழ்ச்சிட்டங்களினுடாக (NECORD, NEERP, NECEDP போன்ற) 678 அரச மற்றும் 94 தனியார் காணிகளுக்குள் ஒட்டுமொத்தமாக அமைக்கப்பட்டு கையாளிக்கப்பட்ட 772 பொதுத் தேவைக்கட்டிடங்கள் (பலநோக்கு கட்டிடம், பொதுக்கட்டிடம், சனசமூக கட்டிடம், சலாச்சார மண்டபம்) மற்றும் அரச காணிகள் தொடர்பில், பெறுமதிகள் கணிப்பிட்டு அவற்றை கணக்குகளுக்கு முறையாகக் கொண்டுவருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

Page 4 of 24

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

கடந்த வருடத்தின் அறிக்கையின் பந்திக்கான தொடர்பு	நடைமுறைப்படுத்தப்படாத பரிந்துரை	இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு
1.6.1 (அ)	காணிகளின் உரிமைத்துவத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.	1.6.2 (அ)

3. நிதி மீளாய்வு

3.1 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக இலகுவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை செயற்றிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்ய வேண்டிய போதிலும், அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதாக கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படடிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையானதன் பிரகாரம் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்கப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், அறிக்கையின் 4.4 பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளகக் கணக்காய்வு பணிகளை உரிய முறையில் செயற்படுத்துவதற்கு செயற்திறனான நடைமுறையொன்று உள்ளதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், அறிக்கையின் 5.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்பின் பிரகாரம் அத்தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் தொடர்பு		இணங்காமை
(அ)	இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை	
(i)	அத்தியாயம் XIX பிரிவு 03	மாவட்ட செயலகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் அரசாங்க உத்தியோகத்தரிகளின் பாவனைக்கென 28 இல்லங்கள் உள்ள போதிலும், கணக்காய்வுத் திகதியான 2025 ஜனவரி 30 வரை தற்போதைய சம்பளத்திட்டத்திற்குமைய பதவிநிலை, இடைநிலை மற்றும் சிற்றூழியர்கள் என வகைப்படுத்தப்பட்டு அவை அட்டவணைப்படுத்தப்பட்ட அல்லது அட்டவணைப்படுத்தப்பட்டாத இல்லங்களாக பட்டியலிடப்பட்டிருக்கவில்லை.
(ii)	அத்தியாயம் XIX பிரிவு 04	இல்லங்களை ஒதுக்குதல், தெரிவுக்கான நியமங்கள், தெரிவு முறைகள் மற்றும் புள்ளியிடல் முறைமைகளை அடிப்படையாகக் கொண்டு இல்லங்கள் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படவேண்டும். இருப்பினும், இவ்வாறான இல்லங்கள் வழங்கப்படுவதற்கு ஏற்ற பொறிமுறை ஒன்றை தயாரித்திருக்கவில்லை.
(iii)	அத்தியாயம் XIX பிரிவு 05 மற்றும் அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் 2016 யூன் 26 ஆம் திகதி வெளியிடப்பட்ட 04/2016 இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை	அரசாங்க உத்தியோகத்தர் இல்லங்களை பயன்படுத்துவதன் பொருட்டு அவ் அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படும் வாடகையானது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள தம்பதிகள், இல்லமொன்றில் வசிக்கும் போது குறித்த அலுவலகர்களின் சம்பளத்திலிருந்து 10% சதவீதமும் அவரது துணை அரச உத்தியோகத்தர் எனின் அவரது சம்பளத்தில் 2½% சதவீதமும் வாடகையாக அறவிடப்படவேண்டும். இருந்தும், 2024 ஜனவரி மாதம் தொடக்கம் திசெமபர் மாதம் வரையான காலப்பகுதிவரை இல்லங்களுக்கு விண்ணப்பித்த குறித்த உத்தியோகத்தரின் துணையிடமிருந்து 2½% சதவீதம் கணக்கீடப்பட்டு வாடகைத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iv)	அத்தியாயம் XIX பிரிவு 06	மாவட்ட செயலக இல்லங்கள் பாவனை குழுவினால் குடியிருப்பு நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் அடங்கிய அறிவுறுத்தல்கள் வெளிப்படுத்தப்படவேண்டும் என்பதுடன் மாவட்ட செயலகம் இல்லத்தை வாடகைக்கு பெற்றுக்கொண்ட உத்தியோகத்தருடன் உடன்படிக்கை ஒன்றினையும் மேற்கொள்ளவேண்டும். இருப்பினும், கணக்காய்வுத் திகதிவரை இவ்வாறான அறிவுறுத்தல்கள் மற்றும் உடன்படிக்கைகள் முறையாக மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை

(i)	2008 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய 06/2008 இலக்க சுற்றறிக்கை கடிதத்தின் 04 ஆம் பிரிவு	மாவட்ட செயலாளருக்கு குறித்தொதுக்கப்பட்ட வாகனத்திற்காக மாதாந்தம் அனுமதிக்கப்பட்ட 245 லீற்றர் எரிபொருள் சலுகைகளுக்கு மேலதிகமாக, 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை, குறித்த அமைச்சின் செயலாளரின் அனுமதி பெறப்படாத நிலையில் 2024 அம் ஆண்டு காலப்பகுதிக்கு பிரயாணம் செய்த 18,720 கிலோமீற்றர் தூரத்திற்காக மீளாய்வாண்டில் 3,552 லீற்றர் எரிபொருள் கொள்வனவுக்காக ரூபா 1,219,711 தொகையொன்று மாவட்ட செயலகத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.
(ii)	2013 ஒக்டோபர் 07 மற்றும் 2021 ஆகஸ்ட் 07 திகதிய 21/2013 மற்றும் 15/2021 இலக்க சுற்றறிக்கைகள்	விடுமுறை தின கடமையானது எத்தினத்தில் மேற்கொள்ள வேண்டும், எவ்வேலை மேற்கொள்ள வேண்டும், அவ்வேலை நாளாந்த கடமைக்கு மேலதிகமான கடமைகளா? உண்மையில் எத்தனை நாளில் மேற்கொள்ள முடியும் என்பது பற்றிய திட்மிடல்கள் இன்றி விண்ணப்பங்கள் கோரப்படுவதும் சிபார்சு செய்யப்படுவதும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இவ்வாறான விண்ணப்பம் கோரல், சிபார்சு செய்தல் தொடர்பில் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.3 வரி தேவைப்பாடுகளுடன் இணங்காமை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2006 இன் பெறுகை வழிகாட்டி நெறி 5.4.11 இன் பிரகாரம், குறித்த வேலையை நிறைவேற்றுகின்ற ஒப்பந்தக்காரர்களுக்கான பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவின் (VAT) போது அதற்கான வரி விலைப்பட்டியல் (Tax Invoice) பெற்றுக்கொள்ளப்படவேண்டும். எனினும், 25 பாடசாலைகளுக்கு கிரிக்கெட் பயிற்றுவிப்புக்கான ஆடுகளம் அமைத்தல் ஒப்பந்த வேலைகளுக்காக ரூபா 4,361,015 தொகை பெறுமதி சேர் வரிக்காக கொடுப்பனவு செய்யப்பட்ட போதிலும், அதற்கான வரி விலைப்பட்டியல்களை 02 ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கணக்காய்வுத் திகதியான 2025 மார்ச் 20 திகதிவரை மாவட்டச் செயலகத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டி ருக்கவில்லை.

3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) எரிபொருள் மற்றும் பிரயாணப்படி வழங்கப்பட்டமை

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் உள்ள மட்டக்களப்பு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் பணியாற்றிய கணக்காளர், 2023 ஏப்பிரல் 27 தொடக்கம் தொடக்கம் 2023 ஒக்டோபர் 05 வரையான காலப்பகுதியில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் பிரதம கணக்காளர் பதவியில் முழுநேர பதில் கடமையாற்றியதற்காக கணக்காளருக்கு அக்காலப்பபகுதிக்கான எரிபொருள் மற்றும் பிரயாணப் படியாக ரூபா 476,530 தொகை வழங்கப்பட்டுள்ளது. உத்தியோகபூர்வ வாகனங்களுக்குப் பதிலாக எரிபொருள் மற்றும் மாதாந்த பிரயாணப்படி வழங்குவது தொடர்பாக அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 2016 செப்டம்பர் 07 மற்றும் 2016 மார்ச் 09 திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 05/2016 மற்றும் 05/2016(1) இவற்றிற்கமைய அமைச்சின் செயலாளரிடம் தனிப்பட்ட அனுமதி பெற்றிருக்காததுடன் குறித்த பதவியில் பதில் கடமை (முழுநேர) ஆற்றினார் என்பதற்கான சான்றுகளை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் செயற்திறன் மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டிருக்காத நிலையில் மேற்படி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) வாகன எரிபொருள் கொடுப்பனவு

2024 ஆம் ஆண்டின்போது மாவட்ட செயலாளரினால் 17,655 (ஜனவரி மற்றும் மே மாதம் தவிர்த்து) கிலோமீற்றர் தூரம் மாவட்டத்திற்கு வெளியே பயணங்களினை மேற்கொன்டதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. மேலும், வாகனத்திற்கான சராசரி எரிபொருள் நுகர்வின் பிரகாரம், மாவட்டத்திற்கு வெளியே பயணங்களினை மேற்கொன்டதற்காக 2,522 லீற்றர்க்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டிற்காக மாவட்டத்திற்கு வெளியே பயணங்களினை மேற்கொன்டதற்காக 4,247 லீற்றர்க்கான கொடுப்பனவுகள் மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆகையினால், 1,725 லீற்றர்க்கான மிகைக் கொடுப்பனவென்று அவதானிக்கப்பட்டது. இதன் சராசரிப் பெறுமதி ரூபா 558,900 ஆகும்.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

(இ) மின்பிறப்பாக்கிக்கான எரிபொருள் கொடுப்பனவு

2023 மற்றும் 2024 ஆண்டிற்காக மாவட்ட செயலாளர்க்கான உத்தியோகபூர்வ இல்லத்தில் காணப்படிகின்ற மின்பிறப்பாக்கிற்கு முறையே 509 லீற்றர் மற்றும் 408 லீற்றர்க்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் பெறுமதி முறையே ரூபா. 185,530 மற்றும் ரூபா. 127,628 ஆகும். எவ்வாறாயினும், இக் எரிபொருள் நுகர்வு தொடர்பில் **அதன்** உண்மைத் தன்மையினை உறுதிப்படுத்தக்கூடிய எவ்வித முறையான ஆவணங்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பதில் கடமைக் கொடுப்பனவு

கோறளைப்பற்று மத்தி மற்றும் கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகங்களில் முறையே 2019 செப்டம்பர் 28 தொடக்கம் 2023 மே 31 மற்றும் 2018 யூலை 26 தொடக்கம் 2023 யூன் 02 காலப்பகுதிகளில் முகாமைத்துவ சேவை தரத்தில் தரம் I இல் உள்ள உத்தியோகத்தர் இருவருக்கு பதில் கடமைக் கொடுப்பனவு வழங்கப்பட்டமை தொடர்பாக தபான விதிக்கோவையின் அத்தியாயம் XXXII பிரகாரம் நியமனம் வழங்கப்பட்டு பிரதேச செயலகத்தினால் பதில் கடமையாற்றிய பதவியின் ஆரம்ப சம்பளத்தின் 25% சதவீதமான தொகை கணிப்பிடப்பட்டு உத்தியோகத்தர் கடமையாற்றிய காலத்திற்கு கூட்டுமொத்தமாக முறையே ரூபா 455,079 மற்றும் ரூபா 581,493 தொகை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இருப்பினும், இக் கடமைகளுக்கான கொடுப்பனவானது தாபன விதிக்கோவையின் அத்தியாயம் VII ஆம் பிரிவின் 12:5:2 இற்கு அமைய மற்றும் பதில் கொடுப்பனவு வழங்குதல் தொடர்பில் மாவட்ட செயலக நிர்வாக பிரிவினால் 2019 ஆகஸ்ட் 16 ஆம் திகதியல் ADM/INTCur/2018/2019 இலக்க கடிதத்தின்படி, முறையே ரூபா 58,212 மற்றும் ரூபா 76,904 தொகை கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டியிருந்தும் முறையே ரூபா 396,867 மற்றும் ரூபா 504,589 தொகைகள் பதில் கடமைக்காக மேலதிகமாக கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளது.

3.5 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல்

(அ) **கொடுப்பனவுகளுக்கான அனுமதியளித்தல், அங்கீகரித்தல், சான்றுதியிடல் மற்றும் கொடுப்பனவுகள்**

(i) மாவட்ட செயலகத்தின் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கான வங்கி கணக்கிணக்க கூற்றினை கணக்காய்வு செய்த போது 2024 செப்டம்பர் தொடக்கம் டிசம்பர் இறுதி வரையான காலப்பகுதி வரை ரூபா 317.82 மில்லியன் பெறுமதியான 518 காசோலைகள் மாற்றப்படாத காசோலையாக காட்டப்படுள்ளது. இம் மாற்றப்படாத காசோலைகளில் முறையாக பொருட்கள் சேவைகளை பெற்றுக் கொள்ளாத நிலையிலும், ஒப்பந்த வேலைகளை பூர்த்தி செய்யாத நிலையிலும் ரூபா 231.14 மில்லியன் பெறுமதியான 55 காசோலைகள், இக்காசோலைகளை வரைவதற்கும், கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் உரிய அதிகாரிகளினால் நிதிப்பிரமாணம் 136, 137, 138 மற்றும் 139 பிரிவில் வழங்கப்பட்டுள்ள கடமைகளை மீறும் வகையில் 55 காசோலைகள் வரையப்பட்டு கொடுப்பனவுகளுக்காக ஒப்பமும் இடப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

(ii) மாவட்ட செயலகத்தினால் பொருட்கள் சேவைகள் மற்றும் ஒப்பந்தவேலைகள் பெற்றுக்கொள்ளப்பட்டமை என கருதப்பட்டு காசோலைகள் சேவை வழங்குநர்களுக்கு வழங்கப்படாத நிலையில் வங்கி கணக்கிணக்க கூற்றில் நிதிப்பிரமாணம் 395(இ) இற்கு அமைய மாற்றப்படாத காசோலையாக காட்டப்பட்டுள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டுள்ளது. உண்மையில் இக் காசோலைகள் கொடுப்பனவுகளுக்காக மாவட்ட செயலகத்தினால் விநியோகிக்கப்படாத (Unrelease Cheques) காசோலையாக பட்டியலிடப்பட்டு அதற்கான காரணங்களும் காட்டப்படவேண்டும்.

(ஆ) மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தினால் பல்வேறுப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொண்டமையை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவுக்காக காசோலைகள் வரையப்பட்டுள்ளன. பிரதேச செயலகத்தினால் 2024 இல் திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்களின் அடிப்படையில் பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக் கொள்ளும் பொருட்டு செய்யப்பட்ட வேலைத் திட்டங்களுக்கு வரையப்பட்ட ரூபா 7,187,310 பெறுமதியான 10 காசோலைகள் அப் பொருட்கள் மற்றும் சேவைகளை 2025 மார்ச் 11 திகதி வரை பெற்றுக் கொள்ளாத நிலையில் பொறுப்புமிக்க உத்தியோகத்தர்களால் குறித்த பொருட்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டமை என்பதனைக் கருத்தில் கொண்டு காசோலைகள் வரையப்பட்டு பாதுகாப்பு பெட்டகத்தினுள் வைக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

4.1.1 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

(அ) கிரிக்கெட் பயிற்றுவிப்புக்கான ஆடுகளம் அமைத்தல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கிரிக்கெட் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்திற்காக பிராந்திய குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய மற்றும் கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபடுகின்ற 25 பாடசாலைகளை முன்னுரிமைப்படுத்தி விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் ரூபா 34.351 மில்லியன் தொகை ஒதுக்கீட்டில் கிரிக்கெட் பயிற்சி ஆடுகளங்கள் நிர்மானிக்கப்பட்டமை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வேலைகள் பூர்த்தியாக்கப்பட வேண்டியது

இவ்வேலைத் திட்டமானது 2024 ஒக்டோபர் 30 ஆம் திகதிக்கு முன்பு முடிக்கப்பட வேண்டியிருப்பினும், 2024 ஜனவரி 30 ஆம் திகதிக்கு பின்னரே பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் மாவட்ட செயலகத்தினால் குறித்த அமைச்சுக்கு இவ் வேலைகள் 2024 டிசம்பர் 20 ஆம் திகதி முடிவுற்றதாகவும் இதற்கான கொடுப்பனவுகள் 2024 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்பட்டாதாக குறிப்பிடப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது.

(ii) ஒப்பந்தக்காரர்கள் தெரிவு

CIDA நிறுவனத்தின் வகைப்படுத்தலின் பிரகாரம் C8 மற்றும் C9 வகையைச் சேர்ந்த மாவட்டத்தின் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மூலம் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியபோதிலும், மாவட்ட செயலகத்தினால் இவ் வேலைக்கான ஒப்பந்தக்காரர்கள் C6 மற்றும் C7 வகையைச் சேர்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பெறுகைகளுக்கான விலைமனுக்கோரல்கள் பெறப்பட்டிருந்தது.

(iii) நிர்மானப்பணிகளுக்கான இடங்களைத் தெரிவுசெய்தல்

இவ் வேலைத்திட்டமானது பாடசாலை மாணவர்கள் மத்தியில் கிரிக்கெட் விளையாட்டினை அபிவிருத்தி செய்யும் நோக்கில் பாடசாலையில் விளையாட்டு ஆடுகளங்களை நிர்மாணிக்க அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும், 05 பாடசாலைகளின் இவ் வேலைத்திட்டமானது நகர சபை மற்றும் பிரதேச சபைக்கு சொந்தமான மைதானத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இவ்வாறாக பாடசாலைகளுக்கான வளாகத்தை விட்டு வேறு நிறுவனங்களுக்கு சொந்தமான மைதானங்களில் ஆடுகளங்களை அமைக்கப்படுவதற்கான அனுமதிகள் எவ்வகையில் பெறப்பட்டன என்பதற்கான சான்றுகள் பாடசாலையினாலும், கல்வித் திணைக்களத்தினாலும் மற்றும் மாவட்ட செயலகத்தினாலும் கணக்காய்வுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iv) புற்தரை பதிக்கப்படல்

ஒப்பந்தம் செய்யப்பட்ட வேலை மதிப்பீட்டில் 4 ஆம் பிரிவானது ஆடுகளம் அமைந்துள்ள கொங்கீறீட் பகுதியை சுற்றி புல் பதிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும் பௌதீக கணக்காய்வின் போது குறித்த இப் பகுதியில் போடப்பட்ட புற்தரை பகுதிகள் முறையாக பதிக்கப்பட்டிருக்கவில்லை. இதற்காக 25 பாடசாலைகளின் இவ் ஆடுகள ஒப்பந்தக்காரர்களுக்கு சுமார் கூட்டு மொத்தமாக 438.40 Sq.m (சதுர மீற்றர்) வேலைக்காக ரூபா 372,640 தொகை கொடுப்பனவாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கமைய, 25 பாடசாலை கிரிக்கெட் ஆடுகளத்தில் புற்கள் பதிக்கப்பட்டிருந்த போதிலும் தற்போது அவை கருகிய நிலையில் உள்ளமையும் சில இடங்களில் முறையாக புல் பதிக்கப்படாது இருப்பதும் அவதானிக்கப்பட்டது.

(v) மண் பரவுதல்

ஒப்பந்தம் செய்யப்பட்ட மதிப்பீட்டில் 5 ஆம் பிரிவானது ஆடுகளத்தின் 44 cu.m அளவில் 25 பாடசாலைகளுக்குமாக 1,100 cu.m அளவில் Type 1 Soil இடுவதற்காக மதிப்பிடப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்தக்காரர்களால் சமர்ப்பபிக்கப்பட்ட கொடுப்பனவு இறுதி பற்றுசீட்டையினை பரிசீலனை செய்த மாவட்ட செயலக தொழிநுட்ப உத்தியோகத்தர் மற்றும் தொழிநுட்ப உதவியாளர் ஆகியோர் இப் பற்றுசிட்டைகளை பரீட்சித்து 1,515.17 cu.m அளவில் மண் போடப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தி கொடுப்பனவுகள்

மேற்கொள்ளப்பட்டிருந்தது. இருப்பினும், திணைக்கள மதிப்பீடுகள் மற்றும் ஒப்பந்தம் செய்யப்பட்ட மதிப்பீடுகள் என்பவற்றை மீறி 23 பாடசாலைகளின் வேலைகளுக்காக கூட்டுமொத்தமாக 453.37 cu.m மண் தொடர்பில் எவ்வித அபிப்பிராயங்களும் தெரிவிக்கப்படாது மதிப்பீட்டை விட மேலதிகமான அளவில் போடப்பட்டதாக காட்டப்பட்ட மேலதிக அளவுக்கு ரூபா 1,947,513 தொகை கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன.

(vi) மேலதிகக் கொடுப்பனவு

கிரிக்கெட் பயிற்சி ஆடுகளம் அமைக்க அனுமதிக்கப்பட்ட 25 பாடசாலைகளில் 15 பாடசாலைகள் மீதான நேரடி பௌதீக கணக்காய்வு மேற்கொண்ட வேளையில் மேற்படி பிரிவுக்கமைய, போடப்பட்டுள்ள மண் அளவானது ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களையும் மாவட்ட செயலக தொழிநுட்ப உத்தியோகத்தர் மற்றும் தொழிநுட்ப உதவியாளர் ஆகியோரால் பரிட்சீக்கப்பட்ட ஆவணங்களையும் ஒப்பீட்டு நேரடிக் கணிப்பீட்டையும் ஒப்பிட்டபோது 462.98 cu.m குறைவாக உள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய மாவட்ட செயலகத்தினால் பொறியிளாளரின் சிபார்சு மற்றும் மாவட்ட செயலாளரின் அனுமதிக்கமைய, 15 பாடசாலைகளின் ஆவணங்களின் படி ரூபா 1,973,590 தொகை ஒப்பந்தக்காரர்களுக்கு மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(vii) ஆடுகளத்தை சுற்றி துப்பரவு செய்தமைக்கான கொடுப்பனவு

ஒப்பந்தத்திற்கமைய, மதிப்பிடப்பட்ட வேலை ஒன்றிக்கான "Allow for site clearing around for ground" செய்வதற்காக 25 பாடசாலைகளுக்கும் மொத்தக் கொடுப்பனவாக ரூபா 136,195 தொகையொன்று வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பௌதீக கணக்காய்வின் போது இவ்வாறான வேலைகள் மேற்கொள்ளப்படாத நிலையில் சில இடங்களில் அவ்வாறான வேலைகளுக்கான தேவை இல்லாத நிலையிலும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(viii) வேலை பூர்த்தியாக்கப்பட்டமை தொடர்பான அறிக்கை

கிரிக்கெட் பயிற்சி ஆடுகளமானது, ஒப்பந்தத்திற்கு அமைய, 2024 நவம்பர் 08 திகதியில் தொடங்கி 2024 நவம்பர் 28 இல் பூர்த்தியாக்கப்படல் வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், அரசியல் மற்றும் காலநிலை மாற்றங்கள் காரணமாக ஒப்பந்தக்காரர்களால் காலநீடிப்பு கோரியதற்கமைய 2024 டிசம்பர் 20 ஆம் திகதிவரை வேலை பூர்த்தியாக்கப்பட்டு உரிய பாடசாலைகளிடம் ஒப்படைக்கப்படவேண்டும். இதற்கமைய, வேலைகள் உரிய காலத்திற்குள் பூர்த்தியடைந்ததாக வேலை பூர்த்தியாக்கப்பட்டமைக்கான அறிக்கையில் தெளிவாக மாவட்ட செயலக தொழிநுட்ப உதவியாளர், தொழிநுட்ப உத்தியோகத்தர், பிரதம பொறியிளாளர் மற்றும் மாவட்ட செயலாளர் ஆகியோரால் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் பூர்த்தியாக்கப்பட்டதாக

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

சான்றுப்படுத்தியுள்ளனர். சான்றுப்படுத்தல்கள் தெளிவாக காணப்படுகின்ற போதிலும், பின்வரும் விடயங்கள் 2024 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட செயலகத்தினால் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

- இவ் ஒப்பந்தக்காரருக்குரிய கொடுப்பனவுக் காசோலைகள் 2024 டிசம்பர் 31 திகதி வரையப்பட்ட போதிலும், கொடுப்பனவு செய்ய மூன்று மாதங்கள் காலம் தாழ்த்தியமை.
- குறித்த வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும், 2025 மார்ச் 31 வரை உரிய பாடசாலைகளுக்கு ஒப்படைக்கப்படாமை.
- கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சில பாடசாலைகளில் இவ் பயிற்சி ஆடுகளம் முழுமையாக பூர்த்தியாக்கப்படாமை.
- 2025 மார்ச் 20 திகதிவரை ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்த பற்றுச்சிட்டை பரிசீலனை செய்யப்பட்டு பிரதம பொறியியளாளரால் சிபார்சு செய்யப்பட்டு மாவட்ட செயலாளரால் கொடுப்பனவுக்காக அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ix) ஆடுகள கொங்கீறீட் பகுதி பழுதடைந்துள்ளமை

கத்தான்குடி அன் - நஷார் மகா வித்தியாலயத்திற்கான கிரிக்கெட் பயிற்சி ஆடுகளமானது நகர சபைக்கான பொது விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்தது. 2025 ஏப்பிரல் 02 திகதிய கணக்காய்வு நேரடிப் பரிட்சிப்பின் போது ஆடுகளத்தின் கொங்கீறீட் பகுதி வெடிப்புக்கள் ஏற்பட தொடங்கியுள்ளமை அவதானிக்கப்பட்டது. இதுவரை பாடசாலைக்கு ஒப்படைக்கப்படாத நிலையிலும், பாடசாலையினால் உரிய தேவைக்காக பயன்படுத்த ஆரம்பிக்கப்படாத நிலையிலும் இவ்வாறான வெடிப்புக்கள் காணப்படுகின்றமை திட்டத்தினை மேற்பார்வை செய்து வழிநடாத்திய உத்தியோகத்தர்களின் கவனயீனத்தையும் திட்டமான நியம தரத்தில் ஒப்பந்தக்காரர்களினால் மேற்கொள்ளப்பட்டிருக்காமையும் சுட்டிக்காட்டுகின்றது.

(x) தண்டப்பண அறவீடு (Liquated Damages)

குறித்த வேலையானது ஒப்பந்தத்திற்கும் காலநீடிப்புக்கும் அமைவாக, 2024 டிசம்பர் 20 ஆம் திகதிக்கு முன்னராக பூர்த்தியாக்கப்பட்டிருக்க வேண்டும். இருந்தும், கணக்காய்வுத் திகதியான 2025 பெப்பரவரி 20 திகதிக்கு பின்னர் முழுமையாக பூர்த்தியடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன்படி இத்தினத்தை பூர்த்தியாக்கப்பட்ட தினமாகக் கருத்தில் கொண்டு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து காலந்தாழ்த்தியதற்கான தண்டப்பணம் ரூபா.719,700 தொகை மாவட்ட செயலகத்தினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

Page 13 of 24

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

4.1.2 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன்முன்னேற்றம் அடையப்படாத செயற்திட்டங்கள்

(அ) வாகன திருத்தம் - JR-7236

மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான JR 7236 இலக்கமுடைய சிறிய ரக லொறி வாகனத்திற்கு 2024 ஆம் ஆண்டில் திருத்தங்களினை மேற்கொள்ள 269-1-1-0-1301 மற்றும் 269-1-1-0-2003 ஆகிய தலைப்பின் கீழ் கூட்டு மொத்தமாக ரூபா 1,449,400 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. இவ் வாகன திருத்தம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(i) அரச வாகனமொன்றை திருத்துவதற்கு அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 29 ஆம் திகதியில் வெளியிடப்பட்ட 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் படி தகைமையுடைய எந்திரப் பொறியியலாளர் ஒருவரிடமிருந்து அறிக்கையொன்றினை பெற்றுக் கொள்ள வேண்டும். இருந்தும், தேவையான திருத்தங்களை மேற்கொள்ள வாகனங்களுக்கு பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர் கோரியதற்கமைய, மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள பிரதம மோட்டார் வாகன பரிசோதகரினால் 2024 டிசம்பர் 30 ஆம் திகதி பரீட்சிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக அரசாங்க வாகனமொன்றை பரீட்சிப்பது தொடர்பாக திணைக்களத் தலைவரான மாவட்ட செயலாளரின் அனுமதி பெறப்படாத நிலையில் இன் நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளது. இங்கு அகக்கட்டுப்பாட்டு முறைமை மற்றும் அகச் செவ்வை முறைமை பின்பற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) குறித்த வாகனம் full tinkering and painting வேலைகள் செய்த பின்னர் அலுமினியம் Body செய்வதற்கு shopping method முறையைப் பயன்படுத்தி விலைமனுக் கோரல் கோரப்பட்டு வழங்குனர் தெரிவு செய்யப்பட்டு ரூபா 680,000 தொகைக்கு 2024 டிசம்பர் 31 இல் காசோலை வரையப்பட்டுள்ளது. இருந்தும், கணக்காய்வுத் திகதியான 2025 ஏப்ரல் 16 ஆம் திகதி வரை குறித்த வாகனத்திற்கு அலுமினியம் Body செய்வதற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.2 பெறுகைகள்

(அ) அக்கறை முரண்பாட்டு பன்முகப்படுத்தப்பட்ட வேலைத்திட்டம்

2024 ஆம் ஆண்டில் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தினால் பன்முகப்படுத்தப்பட்ட வேலைத்திட்டத்தின் கீழ் கூட்டுத்தொகை ரூபா 9,583,832 மில்லியன் பெறுமதியான வேலைத்திட்டங்கள் "ஜெயந்திபுரம் கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு" வழங்கப்பட்டுள்ளமை தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

Page **14** of **24**

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

(i) நிதி அமைச்சின் "சமுக அடிப்படை நிறுவனங்களுக்கான நேரடி ஒப்பந்தங்களை வழங்கள் திட்டம்" தொடர்பான 2021 செப்தம்பர் 29 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிறுபத்தின் 2.2 ஆம் பிரிவின் பிரகாரம் ஏற்கவே வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் மீதிப் பகுதியின் திரட்டிய பெறுமதி மற்றும் முன்மொழியப்பட்ட ஒப்பந்தத்தின் மதிப்பு ரூபா 05 மில்லியனை விஞ்சக்கூடாது. எவ்வாறாயினும், இச்சுற்றறிக்கைக்கு மாறாக 2024 ஆம் ஆண்டின் போது "ஜெயந்திபுரம் கிராம அபிவிருத்தி சங்கதிதிற்கு" கூட்டு மொத்தமாக ரூபா 9,583,832 பெறுமதியான சிவில் வேலைகள் ஒப்படைக்கப்பட்டிருந்துது.

(ii) "ஜெயந்திபுரம் கிராம அபிவிருத்திச்" சங்கத்தின் தலைவர் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் ஒரு உத்தியோகத்தராகக் கடமைபுரிகின்றதுடன் 2024 ஆம் ஆண்டின் போது மட்டக்களப்பு மாவட்ட செயலகம் மற்றும் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் ரூபா 9,583,832 பெறுமதியான 05 சிவில் வேலைகள் வேலைகளுக்கான ஒப்பந்தத்தின் உடண்படிக்கையில் "ஜெயந்திபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின்" சார்பில் கைச்சாத்திட்டிருந்தார்.

(iii) மேலும் குறித்த "ஜெயந்திபுரம் கிராம அபிவிருத்திச்" சங்கத்தின் தலைவரது மனைவி இவ் மாவட்டத்தின் செயலகத்தின் பொறுப்பு வாய்ந்த உயர் பதவியில் உள்ள நிலையில் உள்ளதுடன், மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கான எல்லை வேலி அமைத்தலுக்கான சிவில் வேலைக்கான ரூபா. 3,880,000 பெறுமதியான ஒப்பந்தம்கூட "ஜெயந்திபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு" வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iv) குறித்த உத்தியோகத்தர் (திரு. முருகேஸ்) இவ்வாறான கிராம அபிவிருத்தி சங்கத்தில் இருந்து பணியாற்றுவதற்கு தேவையான அனுமதி பெற்றிருக்க வேண்டும், இருந்தபோதிலும், குறித்த உத்தியோகத்தர் தாபனக் கோவையின் XXXI பிரிவு 05 இன் பிரகாரம் அனுமதி பெறப்படாது கடமையாற்றிமைக்காக திணைக்களத் தலைவரினால் உரிய ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(v) இவ்வாறன நிலையில் குறித்த ஓப்பந்த வேலைகள் தொடர்பான தொழிநுட்ப அறிக்கைகள், கொடுப்பனவுகள், மதிப்பீடுகள், தரவுகள் மற்றும் தகவல்கள் அனைத்தும் உண்மைத் தன்மையை வெளிப்படுத்தும் என்பதில் அக்கறை முரண்பாடு உள்ளமை எம்மால் அவதானிக்கப்பட்டுள்ளது.

Page 15 of 24

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

(ஆ) மாவட்ட செயலக திராய்மடு காணிக்கு வேலி அமைத்தல்

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கான திராய்மடுக் காணிக்கு வேலி அமைப்பதற்காக மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தினால் ரூபா 3,792,030 தொகைக்கு கிராம அபிவிருத்தி சங்கம் ஒன்றுடன் ஒப்பந்தம் ஒன்றை செய்திருந்தது. இவ் ஒப்பந்த வேலை தொடர்பான கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டு வழங்கப்பட்ட மேற்படி வேலை 2024 டிசம்பர் 28 ஆம் திகதிக்கு முன்பு பூர்த்தியாக்கப்பட வேண்டும். இருந்தும், 2025 பெப்ரவரி 10 ஆம் திகதிக்கு பின்னரே பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பிரதேச செயலகத்தினால் குறித்த மாவட்ட செயலகத்திற்கு இவ் வேலைகள் 2024 டிசம்பர் 28 ஆம் திகதி முடிவுற்றதாகவும் இதற்கான கொடுப்பனவுகள் 2024 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்பட்டாதாக குறிப்பிடப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது.

(ii) வேலை ஒப்பந்தமொன்றினை மேற்கொள்ளும் போது ஒப்பந்தக்காரர் கையொப்பம் இட்ட ஒப்பந்த வேலையை குறித்த தினத்தில் பூர்த்தி செய்யும் பொருட்டு காலதாமதத்திற்கு தண்டப்பணம் அறவிடப்படுவது தொடர்பான விடயங்கள் ஒப்பந்ததில் ஒரு பிரிவாக காட்டப்பட்டுள்ள போதிலும் ஒப்பந்தத்தை மேற்கொண்ட மண்முனை வடக்கு பிரதேச செயலகம் குறித்த ஒப்பந்தக்காரரான கிராம அபிவிருத்தி சங்கத்தின் மீதுள்ள அக்கறையின் நிமித்தம் ஒப்பந்ததாரரை இவ் தண்டப்பண அறவீட்டில் இருந்து விலக்களிக்கும் நோக்கத்துடன் காலதாமத தண்டப்பபணம் தொடர்பில் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தமை "அக்கறை முரண்பாட்டுத்" தன்மையை எடுத்துக்காட்டுகின்றது. இன் நிலையில் இக் கால தாமதத்திற்கான தண்டப்பணம் ரூபா 113,760 தொகை அக்கறை முரண்பாட்டுடன் எற்பட்ட கவனயீனத்தினால் அரச பொது நிதி நட்டமாக கருதினால் நிதிப்பிரமாணம் 156 இற்கு பொறுப்பு மிக்க உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேச செயலாளர் விடுதி திருத்தம்

கோரளைப்பற்று வடக்கு பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளரது விடுதியை திருத்தம் செய்வதற்காக மாவட்ட செயலகத்தின் நிதி ஒதுக்கீட்டின் 269-1-1-0-1303 கீழ் 2024 ஆம் ஆண்டில் ரூபா 3,042,774 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக கோரளைப்பற்று வடக்கு பிரதேச செயலாளர் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்துடன் 2024 ஒக்டோபர் 30 ஆம் திகதி ரூபா 2,843,713 தொகைக்கு வேலைகள் 2024 டிசம்பர் 20 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட ஒப்பந்தம் கைசாத்திட்டிருந்து. இருப்பினும், 2025 மார்ச் 20 ஆம் திகதியில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரீட்சிப்பின் போது குறித்த இக் கட்டிட திருத்தம் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. இதன்படி, சுமார் 100 நாட்கள் கால தாமதத்திற்கான தண்டப்பண கட்டணமாக (LD) ரூபா 142,185 தொகையினை பிரதேச செயலகம் ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

Page 16 of 24

(ஈ) விளையாட்டு மைதான அவிவிருத்தி வேலைத்திட்டம்

மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தின் ஊடாக கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலகத்திற்கு 2024 ஆம் ஆண்டில் ரூபா 78.6 தொகை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இவ் ஒதுக்கீட்டின் மூலம் 18 விளையாட்டு மைதானங்களின் அபிவிருத்திக்காக ரூபா 46.9 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இலங்கை சனநாயக சோலிச குடியரசின் 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டி உப இலக்கம் 1.2.1 இன் படி பெறுகையில் பங்கேற்க கூடிய தகுதி வாய்ந்த தரப்பினர்களுக்கு நியாயமானதும், சமமானதுமான வாய்ப்பை வழங்கி போட்டித்தன்மையின் அடிப்படையில் சிக்கனத் தன்மையினை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். எனினும், பிரதேச செயலகத்தினால் ரூபா 46.9 மில்லியன் தொகைக்கு பெறுகை வழிகாட்டியினை பின்பற்றாமல் 18 வேலைகள் வழங்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக போட்டித்தன்மையின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய விலை தெரிவுகளையும் சிக்கனத் தன்மையினையும் பெற்றுக் கொள்வதற்கு பிரதேச செயலகத்தினால் முயற்சி எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பொது நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இன் உப இலக்கம் 2.3 (i) இன் படி சமூக அடிப்படை நிறுவனங்களுக்கு வேலை ஒப்பந்தங்களை வழங்கும் போது வழங்கப்படும் வேலையின் பெறுமதிக்கு ஏற்றாற்போல் அவர்களிடம் போதிய நிதி வசதி காணப்படுகின்றதா, என பிரதேச செயலகத்தினால் உறுதிப்படுத்தல் வேண்டும். இருந்த போதிலும், பின்வரும் கிராமிய அபிவிருத்தி சங்கங்களுக்கு போதியளவு நிதி வசதி காணப்பட்டுகின்றதா?, ஏற்கனவே ஒப்பந்த வேலைகளை தடைகள் இன்றி பூர்த்தி செய்யக் கூடியவர்களா? மற்றும் ஒப்பந்த காலத்திற்குள் வேலைகளை பூர்த்தியாக்கக் கூடியவர்களா என்பவற்றை பரிசீலித்து மற்றும் சுற்றறிக்கைக்கு அமைய வேலை வழங்காது வேலை ஒப்பந்தங்கள் கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

(iii) விளையாட்டு மைதானங்களின் அபிவிருத்தி வேலைகளுக்காக பிரதேச செயலகத்தின் தொழிநுட்ப உத்தியோகத்தரினால் தயாரிக்கப்பட்டிருந்த மதிப்பீடுகளில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக ரூபா 1,564,652 தொகை மதிப்பிடப்பட்டிருந்த வேலைகளுக்கு மேலதிக வேலைகளுக்காக செலுத்தப்பட்டிருந்தது கணக்காய்வின் போது அவதானிக்கப்படடிருந்தது.

(iv) 2024 ஆம் ஆணடில் 18 விளையாட்டு மைதானங்களுக்கான அபிவிருத்தி செயற்றிட்டங்கள் ஒப்பத்தந்தின் படி ரூபா 36.30 மில்லியன் தொகைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட வேலைகள் உரிய காலத்தில் பூர்த்தியாக்கப்படாது 100 சதவீதம் நிறைவு பெற்றதாக 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பிரதி திட்டமிடல் பணிப்பாளரால் முன்னேற்ற அறிக்கையில் காட்டப்பட்டு இறுதிக் கொடுப்பனவுகளுக்காக காசோலைகள் வரையப்பட்டு வேலைகள் பூர்த்தியாக்கப்படாத

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

காரணத்தினால் கொடுப்பனவுகள் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. இருப்பினும், 14 தொடக்கம் 147 வரையான நாட்கள் தாமதித்தே ஒப்பந்த வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் காசோலைகள் வழங்கப்பட்ட தினத்தியினை ஒப்பந்த நிறைவு தினமாக கருத்தில் கொண்டு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து காலந்தாழ்த்தியதற்கான தண்டப்பணம் ரூபா 1,820,394 தொகை பிரதேச செயலகத்தினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) விளையாட்டு மைதானம் புனரமைத்தல் (கோறளைபற்று தெற்கு)

மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தின் ஊடாக கோறளைபற்று தெற்கு பிரதேச செயலகத்திற்கு 2024 ஆம் ஆண்டு ரூபா 61,540,000 தொகை நிதி ஒதுக்கீட்டில் ரூபா 30,000,000 தொகை விளையாட்டு மைதான அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. இருப்பினும், இலங்கை சனநாயக சோலிச குடியரசின் பெறுகை வழிகாட்டி உப இலக்கம் 1.2.1 இன் படி பிரதேச செயலகத்தினால் ரூபா 25,000,000 தொகைக்கு பெறுகை வழிகாட்டியினை பின்பற்றாமல் 12 வேலைகள் வழங்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக போட்டித்தன்மையின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய விலை தெரிவுகளையும் சிக்கனத்தன்மையினையும் பெற்று வினைத்திறன் மிக்க பெறுகையினை மேற்கொள்ள பிரதேச செயலகத்தினால் முயற்சி எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

4.3.1 நிதியல்லாச் சொத்துக்கள் பயன்பாடு

கோறளைப்பற்று வடக்குப் பிரதேச செயலகத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 2017 டிசம்பர் 11 ஆம் திகதியிடப்பட்ட அரச நிர்வாக சுற்றிக்கை கடித இலக்கம் 07/2017 இன் பிரகாரம் இடமாற்றம் செல்லும் அலுவலர் ஒருவரின் பெயருக்கு வழங்கப்பட்டுள்ள பொருளினை அலுவலகர் இடமாற்றம் பெற்றுச் செல்லும் சந்தர்ப்பத்தின் போது உரிய முறையில் களஞ்சியத்துக்கு ஒப்படைத்து அது பற்றிய எழுத்து மூல உறுதியொன்றைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். இருந்தபோதிலும், 2021 ஆகஸ்ட் 05 இல் இடமாற்றம் பெற்றுச் சென்ற பிரதேச செயலாளர் ஒருவருக்கு கோரளைப்பற்று வடக்கு பிரதேச செயலகத்தினால் கையளிக்கப்பட்டிருந்த ரூபா 100,000 தொகைக்கு மேற்பட்ட பெறுமதியுடைய மடிக்கணனி ஒன்றினை 03 (மூன்று) வருடங்களுக்கு மேலாக மீளக்கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினால் கோறளைப்பற்று வடக்குப் பிரதேச செயலகத்திற்கு 2022 டிசம்பர் 22 இல் வழங்கப்பட்ட ரூபா 3,181,011 தொகை பெறுமதியான 36 இயந்திர உபகரணங்கள் இரண்டு வருடங்களுக்கு மேலாக எவ்வித பயன்பாட்டிற்கும் உட்படுத்தப்படாது பிரதேச செயலகத்தில் செயல் விளைவற்றுக் காணப்படுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) பிரதேச செயலகத்தின் 2024 டிசம்பர் 31 இன் பிரகாரம் சிகாஸ் பிரித்தெடுப்பின் பிரகாரம், ரூபா 51,000 பெறுமதியான 51 பாரஅழுத்திகள் (மொங்கன்கள்) காணப்படுகின்றது. இருந்தபோதிலும், பிரதேச செயலகத்தில் 15 பார அழுத்திகள் மாத்திரமே காணப்படுவதுடன் மிகுதி 36 பார அழுத்திகளானவை களஞ்சியம் பொறுப்பேற்கப்பட்ட திகதியில் இருந்து களஞ்சியத்தில் காணப்படவில்லை எனவும் களஞ்சியப் பொறுப்பாளரினால் கணக்காய்விற்கு பதிலளிக்கப்பட்டிருந்தது. மேலும், பிரதேச செயலகத்தில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஒருவரிடம் குறித்த மொங்கான்கள் கையளிக்கப்பட்டதாக ஊரியன்கட்டு கிராம சேவை உத்தியோகத்தரினால் கணக்காய்விற்கு அறிக்கையடப்பட்டுள்ளதுடன், இப்பார அழுத்திகள் தொடர்பான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள பிரதேச செயலகத்தினால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான 01 உழவு இயந்திரம், 01 தண்ணீர் பவுசர் மற்றும் கோரளைப்பற்று வடக்கு பிரதேச செயலகத்தின் 01 உழவு இயந்திரம் ஆகியவற்றுக்கான வருடாந்த வாகன அனுமதிப்பத்திரமானது 01 தொடக்கம் 07 வருடங்களாகப் பெற்றுக்கொள்ளப்படாமல் உள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(உ) பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான ரூபா 600,000 பெறுமதியான உழவு இயந்திரம் மற்றும் ரூபா 50,000 பெறுமதியான உழவு இயந்திரப் பெட்டி ஆகியவை நீண்டகாலமாக எவ்வித பயன்பாடும் இல்லாமல் செயல் விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

4.4 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்காமை

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு 2024 ஆம் நிதியாண்டுக்கான நிதி செயற்பாடு, முகாமைத்துவ செயற்பாடுகள், செயற்திட்ட செயற்பாடுகள் மற்றும் ஏனைய திணைக்களகங்களின் செயற்பாடுகள் மீதான கணக்காய்வின் போது 2024 யூன் தொடக்கம் 2025 மே மாதம் வரையான காலப்பகுதியில் விடுவிக்கப்பட்ட 28 கணக்காய்வு ஐயவினாக்களில் 22 ஐயவினாக்களுக்கு 2025 மே 22 வரை பதில்கள் வழங்கப்படவில்லை.

4.5 முகாமைத்துவ பலவீனங்கள்

(அ) மண்முனை வடக்கு பிரதேச செயலகம்

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சினால் 2023 திசெம்பர் 29 ஆம் திகதி வெளியிடப்பட்ட MF/02/2023 இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைய, அமுல்படுத்தப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டம் - 2024 இன் கீழ் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தினால் இரு தன்னார்வ அமைப்புக்களுக்கு ரூபா. 5,942,156 தொகையில் பொருட்கள் வழங்கப்பட்டமை தொடர்பில் கணக்காய்வின்போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

(i) 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க மற்றும் 1998 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்கத்தினால் திருத்தப்பட்ட தன்னார்வ சமூக சேவைகள் அல்லது அரச சாரா நிறுவனங்களை பதிவுசெய்யும் (பதிவு மற்றும் மேற்பார்வை) சட்டத்தின் கீழ் "மனிதாபிமான கரங்கள்" மற்றும் "முற்போக்கு தமிழர் கழகம்" ஆகிய அமைப்புக்கள் மாவட்ட செயலகத்தில் முறையே 2015 மற்றும் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்டடிருந்த போதிலும், தன்னார்வ அமைப்புக்களால் அவற்றின் தொடர்தேர்ச்சியான இயங்கியமை மற்றும் செயலாற்றியமை தொடர்பில் எவ்வித சான்றுகள் மற்றும் ஆவணங்கள் கணக்காய்வுத் திகதியான 2025 ஜனவரி 15 ஆம் திகதிவரை பிரதேச செயலகத்தினால் கோவைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) மண்முனை வடக்கு பிரதேச செயலாளரினால், மாவட்ட செயலாளருக்கு "பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டம் - 2024" எனும் தலைப்பிடப்பட்ட MN/PLN/DCB/GEN/2024/01 ஆம் இலக்க 2024.08.20 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் "மனிதாபிமான கரங்கள்" அமைப்பு தொடர்பில் நிர்வாக உறுப்பினர்களின் விபரம், கடந்த கால செயற்பாடுகள், இவ் அமைப்பு தற்போது இயங்கும் நிலை, நிரந்தர கட்டிடம் மற்றும் இவ்வமைப்பிற்கு மேலும் உபகரணங்களை வழங்குவது தொடர்பாக ஆலோசனைகளை வழங்குமாறு வேண்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது தொடர்பில் மாவட்ட செயலகத்தினால் எவ்வித அறிவுறுத்தல்களும் கணக்காய்வுத் திகதியான 2025 ஜனவரி 15 ஆம் திகதிவரை வழங்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(iii) "மனிதாபிமான கரங்கள்" மற்றும் "முற்போக்கு தமிழர் கழகம்" ஆகிய அமைப்புக்களின் செயற்பாட்டு அலுவலகம் அமைந்துள்ள முகவரியும் அதன் ஆளுகை உறுப்பினர் ஒருவரின் விபரமும் ஓரே விதமாகக் காணப்படுகின்றமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டள்ளது. ஆகையினால் இவ்விரு அமைப்புக்களினதும் சுயாதீனத் தன்மை மற்றும் நிறுவாக உறுப்பினர்கள் தொடர்பில் கணக்காய்விற்கு தெளிவு படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) "மனிதாபிமான கரங்கள்" மற்றும் "முற்போக்கு தமிழர் கழகம்" ஆகிய அமைப்புக்களின் செயற்பாடுகளுக்காக அதிநவீன கமெராக்களும் உபகரணங்களும் அமைப்புக்களின் வேண்டுகோளுக்கமைய, மண்முனை வடக்கு பிரதேச செயலாளகத்தினால் பண்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியின் கீழ் ரூபா 2,125,200 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்து. எவ்வாறாயினும் இவ் அதிநவீன கமெராக்கள் மற்றும் உபகரணங்களின் உண்மையான தேவைப்பாடு மற்றும் பயன்பாடு பற்றி கணக்காய்வுக்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

Page 20 of 24

(v) ''மனிதாபிமான கரங்கள்'' மற்றும் 'முற்போக்கு தமிழர் கழகம்'' ஆகிய அமைப்புக்களுக்கு முறையே ரூபா. 2,972,170 மற்றும் ரூபா. 2,969,986 தொகை பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாக மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தினால் செயலாற்றல் அறிக்கையில் அறிக்கையிடப்பட்டிருந்து. எவ்வாறாயினும் முறையே ரூபா. 1,173,560 மற்றும் ரூபா. 1,501,100 பெறுமதியான உபகரணங்கள் கணக்காய்வு திகதியான 2025 ஜனவரி 15 ஆந் திகதி வரை உரிய வழங்குநரிடமிருந்து பெற்றுக்கொள்ளாத நிலையில் அமைப்புக்களுக்கு பிரதேச செயலகத்தினால் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளரினால் 2024 ஏப்பிரல் மாதம் NPD/DCB/2024/GEN இலக்க கடிதத்தின் பிரிவு 03 இல் பதிவுசெய்யப்பட்ட சங்கங்கள், சமூக அமைப்புக்கள், சிறுவர் இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு வசதிகள் / உபகரணங்கள் வழங்கும் போது அவை பொதுப் பயன்பாட்டை நோக்காகக்கொண்டு வழங்கப்படுதலை சான்றுப்படுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்ட போதிலும், இவ்வாறான பொருட்கள் எவ்வகையில் பொதுப் பயன்பாட்டிற்கு எவ்வகையில் பயன்படுத்தப்படுகின்றன மற்றும் 2022 மற்றும் 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட இவ் சமூக அமைப்புக்கள் எவ்வகையில் செயற்படுகின்றன என்பன பற்றி ஆய்வு செய்து உறுதிப்படுத்திக் கொள்ளாததுடன் சுற்றறிக்கையில் உள்ளடக்கப்படாத இவ்விடயம் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் அனுமதியும் பெறப்படாது பிரதேச செயலகத்தினால் இப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) தீர்வு செய்யப்படாத வைப்புக்கள்

(i) மண்முனைப்பற்று பிரதேச செயலளர் பிரிவில் கழிவு நீரை அகற்றும் கருத்திட்டத்திற்கான காணி சுவீகரிப்பு வேலைகளுக்காக கிடைக்கப்பெற்ற ரூபா 9.6 மில்லியன் தொகை உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாமலிருந்ததுடன் காணி சுவீகரிப்பு பணிகளை துரிதப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் வைப்புப் பணம் 05 வருடங்களுக்கு மேலாக வைப்பில் காணப்படுகின்றது.

(ii) ஒப்பந்த வைப்பின் கீழ் மொத்த வைப்புத் ரூபா 26,355,774 தொகை 05 வருடங்களுக்கும் மேலாக மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் காணப்படுகின்றது. அதில் ரூபா 9,360,840 தொகை 07 வருடங்களுக்கு அதிகமாக காணப்படுகின்றது. எனினும் 571 ஆம் இலக்க நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம், வைப்புத் தொகையை செலுத்தவோ அல்லது வருமானமாக எடுத்துக் கொள்ளவோ மாவட்ட செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

5. நல்லாளுகை

5.1 உள்ளகக் கணக்காய்வு

மாவட்ட செயலகத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் கோறாளைப்பற்று மேற்கு மற்றும் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகங்களில் முகாமைத்துவ சேவை தரத்தில் தரம் I இல் உள்ள உத்தியோகத்தர் இருவருக்கு பதில் கடமை கொடுப்பனவு வழங்கப்பட்டமையானது முறையற்றது என குறிப்பிட்டு விடுவிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு அறிக்கை தொடர்பில் உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய மேலதிக கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு உத்தியோகத்தர்களால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 41 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு அமைய, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடைபெறுகின்ற போதிலும், பிரதேச செயலகங்களின் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பிலான பெறுமதிகள், ஒப்பந்தம் மீதான காலதாமதக் கட்டணம் முகாமைத்துவ வினைத்திறனனின்மை மற்றும் 2019 ஆம் ஆண்டில் COPA குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் செயற்படுத்தல்கள் என்பன மூன்று வருடங்களுக்கு மேலாக தீர்க்கமானதும் விரைவாகவும் முடிவுகள் எடுக்கப்படாது ஒவ்வொரு குழுக் கூட்டங்களிலும் காலம் தாழ்த்தி செல்வது அவதானிக்கப்பட்டுள்ளது.

2.3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் பல்வேறுபட்ட பொருட்கள், சேவைகள் மற்றும் ஒப்பந்த வேலைகள் என்பவற்றை பெற்றுக்கொண்டமையை அடிப்படையாகக் கொண்டு அவற்றிக்கான கொடுப்பனவுகளுக்காக காசோலைகளை வரைகின்றன. இவ்வாறாக வரையப்பட்ட காசோலைகள் தொடர்பில் கணக்காய்வு செய்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டில் பொருட்கள், சேவைகள் மற்றும் ஒப்பந்த வேலைகள் குறித்த காலத்தினும் நிறைவு செய்யப்படாத நிலையில் மற்றும் கோரப்பட்டதற்கு அமைய பொருட்கள் சேவைகள் பெற்றுக் கொள்ளாத நிலையில் நிதிப்பிரமானம் 136,137,138 மற்றும் 139 பிரகாரம் அதிகாரத்தைப் பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் வழங்குநர்களுக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கும் கொடுப்பனவுகளுக்காக காசோலைகளை வரைந்து கொடுப்பனவுகளை மேற்கொள்ளாது பாதுகாப்பு பெட்டகத்தினுள் மூன்று மாதங்களுக்கு மேல் வைத்துள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ii) கணக்காய்வுத் திகதியான 2025 மார்ச் 11 திகதி வரை பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்த வேலைகளுக்கான கொடுப்பனவுகள், குறித்த வேலை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட தினத்தில் பூர்த்தி செய்யப்படாத நிலையில் ஒப்பந்தத்திற்கு அமைய, பூர்த்தியாக்கப்பட வேண்டிய தினத்தில் இருந்து கணக்காய்வுத் திகதியான இன்று வரை அறவிட வேண்டிய தண்டப்பணத்தினை (காலம் தாழ்தியதற்கான) கணிப்பீட்டு அறவிடுவதற்கும் அவை பற்றிய அறிவுறுத்தல்களை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டி ருக்கவில்லை.

(iii) விலைமனு கோரப்பட்டு, கொள்வனவு கட்டளைகள் வழங்கப்பட்டு பொருட்கள் களஞ்சியத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டு பதிவேடுகளில் பதியப்பட்டமை என்பன உறுதி செய்யப்பட்ட பின்னரே கொடுப்பனவுக்கான அனுமதி வழங்கப்பட வேண்டும். இருந்தும் கொடுப்பனவு காசோலைகள் உரிய பொருட்களை மாவட்ட செயலகத்தில் மற்றும் பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளாத நிலையில் காசோலைகள் வரையப்பட்டுள்ளது. இவ்வாறு காலம் தாழ்த்தி பெற்றுக் கொள்ளும் பொருட்கள் தொடர்பில் உரிய வழங்குனரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தண்டப்பணம் மற்றும் எதிர்காலத்தில் இவ்வாறான வழங்குனர்களை பட்டியலில் இணைக்கப்படுவது என்பன பற்றிய தீர்மானங்கள் எதுவும் இதுவரையில் மாவட்ட மட்டத்தில் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

6. மனிதவள முகாமைத்துவம்

6.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் உள்ளபடியான பதவியணியினர்

(அ) மாவட்ட செயலகத்திற்காக அனுமதிக்கப்பட்ட ஆளணியினரின் எண்ணிக்கை 1687 என்பதுடன், உண்மையான எண்ணிக்கை 2376 ஆகும். மேலதிக பணியாளர்களின் எண்ணிக்கை 841 அல்லது அங்கிகரிக்கப்பட்ட ஆளணியின் 50 சதவீதமாகும். 2024 டிசம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி பதவி நிலை உத்தியோகத்தர்கள் பதவிகளுக்கு 32 வெற்றிடங்களும், இடைநிலை மற்றும் சிற்றூழியர் தரங்களுக்கான பதவிக்கு 120 வெற்றிடங்களும், உள்ளன. இந்த பதவியில் நிலவும் வெற்றிடங்கள் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளின் வினைத்திறன் மற்றும் வினைத்திறனுக்கு மோசமாக பாதிக்கப்படலாம் என்பதை அவதானிக்க முடிந்தது.

(ஆ) மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களில் அனுமதிக்கப்பட்ட பலதரப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பதவிகளுக்கு 667 எண்ணிக்கையான பதவியினர் இருந்த போதிலும், 2024 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அந்த பிரதேச செயலகங்களில் மற்றும் மாவட்ட செயலகங்களில் பணியாற்றும் மேலதிக பணியாளர்களின் எண்ணிக்கை 833 ஆகும். ஏனவே அதிகப்படியான ஆளணியினர்கள் 125 சதவீதமாகும். இதன் விளைவாக அந்த மேலதிக அதிகாரிகளுக்கு மாதாந்த சம்பளத்தை பெறுவதற்காக ஏதேனும் அர்த்தமுள்ள பணிகள் அல்லது அவர்களுக்கு பணிகள வழங்கப்பட்டள்ளதா என்பதை உறுதிப்படுத்த முடியாதுள்ளது.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

(இ) கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலகத்தில் கணக்காளர், மேலதிக மாவட்ட பதிவாளர் சமூக சேவை உத்தியோகத்தர் மற்றும் கிராம சேவையாளர் (நிர்வாகம்) போன்ற பதவிகளுக்கு 2017 – 2023 ஆம் ஆண்டு காலப்பகுதி தொடக்கம் இன்றுவரை வெற்றிடமாக உள்ளமையும் மற்றும் கிராம சேவையாளர் பதவிகளுக்கு 02 வெற்றிடங்களும், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு 05 வெற்றிடங்களும், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவிகளுக்கு 13 வெற்றிடங்களும் உள்ளமையும் மற்றும் சமூர்த்தி செயற்பாடுகளுக்கு முகாமையளர் தொடக்கம் சமூர்த்தி அபிவிருத்தி உத்திடியோகத்தர் வரை பதிகளுக்கு 21 வெற்றிடங்களும் உள்ளமையும் அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த பதவியில் நிலவும் வெற்றிடங்கள் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளின் வினைத்திறனை வெகுவாக பாதிக்கலாம் என்பதை அவதானிக்க முடிந்தது.

(ஈ) கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலகத்திற்கான அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 08 ஆகவும் உள்ளபடியான பதவியணியினர் 39 ஆகவும் காணப்படுகின்றது, ஆகையினால் 31 பதவியனியினர் மிகையாகக் காணப்படுகின்றனர். ஆத்துடன், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 18 ஆகவும் உள்ளபடியான பதவியணியினர் 08 ஆகவும் காணப்படுகின்றது. ஆகையினால் 10 பற்றாக்குறை பதவியனியினர் காணப்படுகின்றனர். இது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 45 சதவீதமான பற்றாக்குறையினை சுட்டிக்காட்டுகின்றது. இதேவேளை முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்ளின் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்ய எவ்வகையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன மற்றும் மக்களுக்கு எவ்வகையில் வினைத்திறனான சேவையை வழங்க முடியும் என்பது பற்றி கணக்காய்வில் தீர்மானிக்கமுடியாதிருந்துது.

M.H.M. அறபாத்
சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக.

Page **24** of **24**

அத்தியாயம் 04 செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

குறிப்பீட்டு சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	100% - 90%	**75% - 89%**	**0% - 74%**
கட்டிட மீள்நிர்மானம் மற்றும் மேம்படுத்தல்	99.11%	-	-
புதிய கட்டிட நிர்மானம்	-	-	-
புதிய மாவட்டச் செயலக கட்டிட நிர்மானம்	100.00%	-	-
தளபாடம் மற்றும் உபகரணம்	100.00%	-	-
பொறி மற்றும் இயந்திரம்	99.99%	-	-

அத்தியாயம் 05 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை சுட்டிகள்

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை சுட்டிக் காட்டல்.

பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடையும் செயலாற்றுகை (SDG)						
குறிக் கோள் இலக்கம்	இலக்கு/குறிக்கோள்	அடைவுகள்	குறிகாட்டிகள்	இதுவரை அடையப்பெற்ற முன்னேற்றம்		
				0% - 49%	50%-74%	75% - 100%
1	அனைத்து இடங்களிலும் அனைத்து வடிவங்களிலுமுள்ள வறுமையை ஒழித்தல்	1.1 2030 ஆம் ஆண்டளவில் எல்லா இடங்களிலுமுள்ள மக்களின் தீவிர வறுமையை ஒழித்தல். தற்போது நாளொன்றுக்கு 1.25 அமெரிக்க டொலர்களிலும் குறைந்த வருமானம் பெறும் மக்களே தீவிர வறுமையிலுள்ளவர்களாக கணிக்கப்படுகிறார்கள்.	• அஸ்வெசும உதவி பெறும் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை. • மிகவும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்படும் உலர் உணவுகளின் எண்ணிக்கை.		√	
		1.5 2030களில், ஏழைகள் மற்றும் நலிவடைந்தோரின் தாக்குப்பிடிக்கக் கூடிய தன்மையினை கட்டியெழுப்புதல் மற்றும் காலநிலை சம்பந்தமான தீவிர நிகழ்வுகளின் போது அவர்களின் பாதிக்கப்படும் தகவினையும், ஏனைய பொருளாதாரம், சமூக மற்றும் சுற்றாடல் தொடர்பான அதிர்ச்சிகள், அழிவுகளையும் குறைத்தல் மிகவும் முக்கியமாகும்.	• வறட்சி பாதிப்புகளை சமாளிக்க அமைக்கப்பட்ட விவசாய கிணறுகளின் எண்ணிக்கை. • வறட்சி பாதிப்புகளை குறைக்க புனரமைக்கப்பட்ட சிறிய குளத்தின் எண்ணிக்கை.		√	

2	பசியை ஒழித்தல்	2.4: 2030களில், உற்பத்தித் திறனையும் உற்பத்தியையும் அதிகரிக்கவல்ல, சூழற்தொகுதிகளை பேணக்கூடிய, காலநிலைமாற்றங்கள், கடுமையான காலநிலை, வரட்சி, வெள்ளம் மற்றும் ஏனைய அனர்த்தங்கள் ஆகியவற்றுக்கேற்ப மாற்றியமைத்துக்கொள்ளும் தகவை வலுப்படுத்தக்கூடிய, நிலம் மற்றும் மண்ணின் தரத்தை அதிகரிக்கக்கூடிய நிலைபேறான உணவு உற்பத்தி முறைமைகளையும், நெகிழ்திறன்மிக்க விவசாய நடைமுறைகளையும் உறுதி செய்தல் வேண்டும்	•வீட்டுத்தோட்டங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. •புதுப்பிக்கப்பட்ட அணைக்கட்டுகள், குளங்கள் மற்றும் கால்வாய்களின் எண்ணிக்கை. •காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப நடத்தப்பட்டபயிற்சித் திட்டங்களின் எண்ணிக்கை.		√	
3	நலமான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை	3.4: 2030களில், தொற்று அல்லாத நோய்களை கட்டுப்படுத்தல் மற்றும் சிகிச்சையளித்தல் மூலமாக மன ஆரோக்கியத்தையும் நல்வாழ்க்கையையும் ஊக்குவிப்பதன் மூலமாக முதிர்ச்சிக்கு முன்னரான இறப்பை மூன்றில் ஒரு பகுதியாகக் குறைக்க முடிகிறது.	• தொற்றாத நோய பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை • பொதுப் பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களின் எண்ணிக்கை புதுப்பிக்கப்பட்டு அனைவருக்கும் பயன்பாட்டிற்கு வழி செய்கிறது. • ஆரோக்கியமான உணவு சமைத்தல் பற்றி நடத்தப்படும் பயிற்சித் திட்டத்தின் எண்ணிக்கை.		√	

4	தரமான கல்வி	4.1 2030களில், அனைவருக்கும் இலவசமாகவும், சமமாகவும் மற்றும் தரமானதுமான முதல்நிலை மற்றும் இரண்டாம்நிலை கல்வி தொடர்புடைய மற்றும் பயனுள்ள கற்றல் விளைவுகளை இட்டுச் செல்வதை உறுதிப்படுத்தல் வேண்டும்.	• பாடசாலை வசதிகளின் அளவு அதிக எண்ணிக்கையில ான மாணவர்களைப் பூர்த்தி செய்யும் வகையில் மேம்படுத்தப்பட்டு ள்ளது.		√	
6	சுத்தமான நீர் மற்றும் சுகாதாரவசதிகள்	6.1: 2030களில், உலகளவில் பாதுகாப்பானதும் மற்றும் அனைவருக்கும் போதுமான குடிநீர் கிடைப்பதை உறுதிசெய்தல் மிக முக்கியமாகும்.	• பாதிக்கg;gl;l குடும்பங்களுக்காக கட்டப்பட்ட கழிவறைகளின் எண்ணிக்கை • பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட நீர் விநியோக இணைப்புகளின் எண்ணிக்கை		√	
7	அனைவராலும் பெறக்கூடிய மற்றும் நியாயமான	7 .b : 2030களில், நவீன, நிலைபேறான சக்திவலு சேவைகளை அனைத்து அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் குறிப்பாக குறைந்தளவில் அபிவிருத்தியடைந்த நாடுகள், சிறிய தீவில் அபிவிருத்தியடைந்து வரும் மாநிலங்கள் மற்றும் நிலத்தால் சூழப்பட்ட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் ஆகியவற்றுக்கு வழங்குவதற்காக அந்நாடுகளின் சம்பந்தப்பட்ட செயல்திட்டங்களுக்கு அமைவாக உள்கட்டமைப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பம் விரிவாக்கப்பட வேண்டும்.	• நிறுவப்பட்ட சூரிய சக்தி அலகுகளின் எண்ணிக்கை. • தேசிய மின்திட்டத்திலிருந்து மின்சார இணைப்பு பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை. • தேசிய கிரிட் லைன் கிமீ நீட்டிக்கப்பட்டுள்ளது.		√	

8	கௌரவமான வேலைவாய்ப்பினையும், பொருளாதார வளர்ச்சியினையும் முன்னிறுத்தல்	8.3 : அபிவிருத்தி சம்பந்தமான கொள்கைகள் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்குவதுடன் அது ஒழுக்கமான தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவதுடன் தொழில்முனைவோர், ஆக்கத்திறன் மற்றும் கண்டுபிடிப்புகள் தொடர்பிலும் அத்துடன் ஒழுங்குபடுத்துதல் மற்றும் நுண், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவித்தல் அடங்கலாக இவற்றின் மூலம் நிதியியல் சேவைகளுக்குள் பிரவேசிக்க முடிகிறது	• கண்ணியமான சேவையை உறுதி செய்வதற்காக நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை. • வலுவூட்டப்பட்டு அபிவிருத்தியடைந்தசிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் எண்ணிக்கை		√	
9	தொழில் துறை, புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு	9.1: தரம், நம்பகத்தன்மை, நிலையான மற்றும் நெகிழ்திறன்மிக்க உள்கட்டமைப்பு ஆகியவற்றை மேம்படுத்த வேண்டியுள்ளதுடன் அவை பிராந்திய மற்றும் எல்லைத் தாண்டிய உள்கட்டமைப்பும் அடங்கலாக பொருளாதார அபிவிருத்தி மற்றும் மனித நல்வாழ்க்கை சம்பந்தமாக அனைவருக்கும் அணுகக்கூடியதாகவும் இயலக்கூடியதாகவும் இருத்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.	• மேம்படுத்தப்பட்ட சுற்றுலா தலங்களின் எண்ணிக்கை. • முதலீட்டு வலயங்களை புதிதாக உருவாக்குவதன் மூலமாக முதலீட்டுக்கான சூழல் இலகுபடுத்தப்பட்டுள்ளது.		√	

11	நிலைபேறான நகரங்களையும், குடியிருப்புக்களையும் அமைத்தல்	11.1: 2030களில், போதுமானளவு பாதுகாப்பு மற்றும் இயலக்கூடியதான குடியிருப்பு வசதிகள் மற்றும் அடிப்படைச் சேவைகள் மேம்படுத்தப்பட்ட சேரிகள் தொடர்பில் அனைவருக்கும் கிடைக்கக்கூடியதாக இருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.	• பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக புதிதாக நிருமாணிக்கப்பட்ட / புனரமைக்கப்பட்ட குறைந்த செலவிலான வீடுகளின் எண்ணிக்கை.		√	
		11.2: 2030களில், பாதுகாப்பானதும், இயலக்கூடியதுமான நிலையான போக்குவரத்து முறைமைகள் அனைவருக்கும் கிடைக்கக்கூடியதாக இருக்க வேண்டும். வீதிப் பாதுகாப்பு, பொதுவாக பொதுப் போக்குவரத்தினை விரிவாக்குவதும்,	• புதிதாக நிருமாணிக்கப்பட்ட /புனரமைக்கப்பட்ட வீதிகளின் கி.மீ • புதிதாக நிருமாணிக்கப்பட்ட பாலங்களின் எண்ணிக்கை. • புதிதாக நிருமாணிக்கப்பட்ட வீதிகளின் பாதுகாப்பு மற்றும் கட்டமைப்புக்களின்எண்ணிக்கை		√	

5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள்

மாவட்டத்தில் காணப்படும் சமூக பொருளாதார அபிவிருத்தி வளர்ச்சியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டியூடாக 2024 இல் நிலைத்திருக்கத்தகு அபிவிருத்தி இலக்குகளில் கணிசமான அளவில் குறிப்பிட்ட நோக்கங்கள் எட்டப்பட்டன என்பதை இது பிரதிபலிக்கின்றது.

அத்தியாயம் 06 மனிதவள விபரம்

6.1 பதவியணி முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி	பதவி வெற்றிடம் / (அதிகப்படியான)
சிரேஷ்ட நிலை	74	65	09
மூன்றாம் நிலை	33	21	12
இரண்டாம் நிலை	1,410	2,142	-732
ஆரம்ப நிலை	156	153	3
மொத்தம்	**1,673**	**2,381**	**-708**

6.2 நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு தாக்கம் செலுத்திய மனித வளங்களின் மிகை அல்லது குறை எவ்வாறானது என்பதனை சுருக்கமாகக் குறிப்பிடுதல்

எமது மாவட்ட செயலகத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 1673 ஆகவும் தற்போது உள்ளவாறான ஆளணி 2381 ஆகவும் உள்ளனர்.

கிராம சேவை உத்தியோகத்தர்கள் -35 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் - 52 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் - 7 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர்கள் - 03 வெற்றிடங்கள் இரண்டாம் நிலை மட்டத்தில் காணப்படுகின்றது.

அதேசமயம் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மேலதிகமான ஆளணி 837 ஆக காணப்பட்டபோதிலும் மாவட்ட நிருவாகத்தை சுமகமாக நடாத்துவதற்காக மேலதிகமாக காணப்படும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் உதவியுடன் பற்றாக்குறையான பதவியணியினரின் கடமைகள் பகிர்ந்தளிக்கப்பட்டள்ளது.

கடந்த வருடம் திட்டமிடல் பிரிவின் பதவியணியினர் மாவட்ட செயலக பதவியணியினருடன் இணைக்கப்பட்டதால் முன்னைய ஆண்டுகளைவிட பதவியணி அதகரிப்பு ஏற்பட்டதற்கான காரணமாக அமைந்தது.

6.3 மனித வள அபிவிருத்தி

ரூபா.000

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்றப்பட்ட பதவியினர் எண்ணிக்கை	நிகழ்ச்சித் திட்டக் காலம்	மொத்த முதலீடு (ரூபா'000) உள்நாட்டு வெளிநாட்டு	நிகழ்ச்சித்திட்டத்தின் இயல்பு (உள்நாட்டு / வெளிநாட்டு	வெளியீடு / பெற்றுக்கொண்ட அறிவு
இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட வரி முறை மற்றும் வரி ஒழுங்குமுறை பயிற்சி திட்டம் - மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள்	100	2 நாட்கள்	40,040.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
வலை அபிவிருத்தி பயிற்சி திட்டம் (Web Development)–மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக IT உத்தியோகத்தர்கள்	19	2 நாட்கள்	52,650.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
தற்போதைய காணிப்பிரச்சினைகள் மற்றும் காணிச் சுற்றறிக்கைகள் பற்றிய விழிப்புணர்வு பயிற்சி நிகழ்ச்சிதத்திட்டம - மாவட்டச் செயலக மற்றும் பிரதேசசெயலக உத்தியோகத்தர்கள்	100	3 மணித்தியாலங்கள்	21,100.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
புதிதாக நியமனம்பெற்ற கிராம உத்தியோகத்தர்களுக்கான பயிற்சித் திட்டம்	84	15 நாட்கள்	522,200.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
சிங்கள மொழி புலமைப் பயிற்சித் திட்டம் - மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள்	45	25 நாட்கள்	161,625.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
காணி கையகப்படுத்தும் சட்டம் பற்றிய பயிற்சி திட்டம் - மாவட்ட செயலக மற்றும் பிரதேசசெயலக உத்தியோகத்தர்கள்	100	6 மணித்தியாலங்கள்	108,900.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
அரசாங்க காணியை மீட்பதற்கான சட்டம் பற்றிய பயிற்சித் திட்டம் - மாவட்டச் செயலக மற்றும் பிரதேசசெயலக உத்தியோகத்தர்கள்	100	6 மணித்தியாலங்கள்	107,900.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
வன பாதுகாப்பு சட்டம் மற்றும் மரங்களை கொண்டு செல்வதற்கான அனுமதி குறித்த பயிற்சிப் பட்டறை - மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்	80	3 மணித்தியாலங்கள்	14,100.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
மன அழுத்த முகாமைத்துவப் பயிற்சித் திட்டம் - மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள்	60	3 மணித்தியாலங்கள்	73,225.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல
தகராறுகளை தீர்க்கும் மாற்று திட்டமாக மத்தியஸ்தம் - மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்	75	4 மணித்தியாலங்கள	68,425.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்

பயிர்க் காப்பீடு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி – மாவட்டச் செயலக மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்	60	2 மணித்தியாலங்கள்	11,725.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
ஆளுமை விருத்தி தொடர்பான ஆன்மிக கருத்தரங்கு – மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள்	78	3 மணித்தியாலங்கள்	11,250.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல
மேகக்கணிக்கு பணிச்சுமைகளை நகர்த்துவதற்கான பயிற்சித் திட்டம் – மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள்	55	6 மணித்தியாலங்கள்	61,125.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
உற்பத்தித்திறனுக்கான நல்ல தொடர்பு பற்றிய செயலமர்வு – மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள்	75	6 மணித்தியாலங்கள்	83,625.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
வெள்ளத் தணிப்பு உத்திகளை மேம்படுத்துவதற்கான பயிற்சித் திட்டம் – மாவட்டச் செயலக மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்.	60	3 மணித்தியாலங்கள்	87,950.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
சைகை மொழி குறித்த பயிற்சி – மாவட்டச் செயலக மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்.	51	12 நாட்கள்	149,780.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
பணியிடத்தில் மனநலத்திற்கு முன்னுரிமை அளிப்பது குறித்த பயிற்சித் திட்டம் – மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள்.	100	3 மணித்தியாலங்கள்	23,725.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
அடிப்படை நிதி ஒழுங்குமுறைஇ நிதி மேலாண்மை ரூ சம்பளம் பற்றிய பயிற்சித் திட்டம் – மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள்.	100	6 மணித்தியாலங்கள்	109,200.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
விசேட தேவையுள்ள குழந்தைகளுக்கான கல்வி வழிகாட்டுதல் மற்றும் அடிப்படை சைகை மொழிப் பயிற்சித் திட்டம் – மாவட்டச் செயலக மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்.	85	3 மணித்தியாலங்கள்	74,825.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
மகாவலி அதிகாரசபை சட்டம் மற்றும் அதிகார வரம்புகள் – மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள்.	100	3 மணித்தியாலங்கள்	19,325.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
திரு.T.சுமன் IESL சந்தா மற்றும் பதிவு கட்டணம்	1	-	7,245.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
திரு.T.நிர்மல்ராஜ் முதுகலை பட்டப்படிப்பு கட்டணத்தை செலுத்துதல்	1	-	152,000.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்

MDE - கிழக்குப் பல்கலைக்கழகம் திருமதி.MAC. ரமீசா திருமதி.MS.சில்மியா திருமதி.N.பிருந்தன் ஆகியோரின் இறுதிக் கொடுப்பனவு.	3	-	25,500.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
APFA இன் திருமதி.G.ரமேஷ் ஆண்டு சந்தா	1	-	7,200.00	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
NILET இல் சிங்கள தமிழ் மொழிபெயர்ப்பு பாடநெறிக்கான பயிற்சி திரு.C.திவாகரன் திருமதி.SIM.ஜலால்தீன் திருமதி.S.A.ரசீத் திருமதி.C.திருபாகரன் திருமதி.Y.சதுஷியா	5	-	161,666.65	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
14 பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சித் திட்டக் கொடுப்பனவு		01.01.2024 31.12.2024	1,867,132.08	உள்நாட்டு	ஆளுமை விருத்தியை கட்டியெழுப்புதல்
மொத்தம்			**4,023,438.73**		

அத்தியாயம் 07 இணக்கப்பாட்டு அறிக்கை

இல	ஏற்படைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமாற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது
01	**பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.**			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
1.2	அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்)	-		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	-		
1.5	சிறப்பு முற்பணக் கணக்கு	-		
1.6	ஏனையவை	-		
2	**புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி.4450-**			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்துப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
2.2	ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பரா-மரித்தல்	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
2.6	காசோலை மற்றும் காசுக்கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
2.7	பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
2.8	இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
2.9	இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
2.10	பொறுப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
2.11	அடிக்கட்டை புத்தகங்களின் (GA – N20) பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
03.	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி.135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		

3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்பட்டது.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
3.4	2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல.171/2004 இன் படி அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
04	**வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயற்பாட்டுத்திட்டம் தயாரித்தல்	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
4.2	வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரிததல்	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
4.3	வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
4.4	வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி. திணைக்களத்தில் (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
4.5	வருடாந்த காசுப்பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
05	**கணக்காய்வு வினாக்கள்**			
5.1	அனைத்து கணக்காய்வு வினாக்களும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
06	**உள்ளக்க் கணக்காய்வு**			
6.1	நி.பி.134 (2) டி.எம்.ஏ/1-2019 படி ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
6.3	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிப்படையில் கணக்காய்வு நாயகத்திற்கு சமர்ப்பித்தல்.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
6.4	அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134(3) நிதி பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வு நாயகத்திற்கு சமர்ப்பித்தல்.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		

07	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	டி.எம்.ஏ/1-2019 சுற்றறிக்கயைின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
08	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல.01/2017 சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்கவேண்டும்	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
8.2	மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும் அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல்அலுவ-லகத்திற்குஅனுப்புவதற்கும் பொருத்தமானதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
8.3	அரச நிதி சுற்றறிக்கை இல.05/2016 இன் படி பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
8.5	நி.பி.772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
09	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை கணக்காய்வாளர் நாயகத்திற்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும்.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
9.3	வாகன பதிவு புத்தகங்கள் பரா-மரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி103,104,109 மற்றும்110 இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
9.5	2016.12.29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல.2016/30 இன் பந்தி 3.1 இன் விதிகளின் படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		

9.6	குத்தகை வாகனங்களின் உரித்த பதிவு பத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும்.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
10	**வங்கி கணக்குகளின் முகாமை**			
10.1	உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
10.2	மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளைத் தீர்த்தல்.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
10.3	வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவை-களைத் தீர்த்தல்.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
11	**நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவ-ிடல்.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
11.2	நி.பி.94(1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும்	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	எல்லைகளுக்குள் இணங்குதல்	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல்.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல்.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி.571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
13.2	பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு அறிக்கை புதுப்பித்தல் மற்றும் பரா-மரித்தல்	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
14	**முற்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப்புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
14.2	நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்த மாதத்திற்குள் தீர்க்கப்படும்.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
14.3	நி.பி.371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல்.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
14.4	மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும்.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		

15	**வருமானக் கணக்கு**			
15.1	விதிகளின் படி சேர்க்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
15.2	திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
15.3	நி.பி. 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல்	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகள் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
16.3	20.09.2017 தேதியிட்ட எம்.எஸ்..டி சுற்றறிக்கை இல.04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
17	**பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்**			
17.1	தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
17.2	அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துகள்/ குற்றச்சாட்டுக்களை எளிதாக்குதல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
17.3	தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
18	**பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்**			
18.1	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல.05/2008 மற்றும் 05/2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கயைாளர் சாசனத்ததை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்ததல்.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		
18.2	சுற்றறிக்கையின் பந்தி 2.3 ஐப் பொறுத்தவரை, பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கயைாளர் சாசனத்ததை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதீப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறி முறையை அமைத்துள்ளது.	**இணக்கப்பாடு எட்டப்பட்டது.**		

19	**மனித வள திட்டத்தினை தயாரித்தல்**			
19.1	2018.01.21 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல.02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வள திட்டத்தினை தயாரித்தல்.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்த பட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கு குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும்.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
19.3	மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின 6.5 வது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத்திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல்.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		
20	**கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்**			
20.1	முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பந்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல்.	இணக்கப்பாடு எட்டப்பட்டது.		